www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

# NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

21 AUGUST 2022 - SUNDAY | Pages - 10 | E Paper - # 003 / Y 01 / 2022

Web: WWW.NEWSPLUS.LK E-mail: editor@newsplus.lk

Cake Talk
Bakery & Confectionery
Telecom Juntion, kattankudy - 01.
Tel : 065 2248 444
55, Old Road, kattankudy - 03.
Tel : 065 2248 044
Hotline : 077 601 55 84

## ஊடகவியலாளர் பிக்கீர் காலமானார்



(நூருல் ஹுதா உமர்)

ஹரீஸ் எம்.பி யின் இரங்கல் செய்தி!

எல்லோருடனும் அன்புடன் பழகும் சரளமாக சகலருடனும்

02 »»

ரணில் வீடு எரிப்பு எதிரொலி:

# ரவூப் ஹக்கீமிடம் தீவிர விசாரணை



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் அளவில் விசாரணை நடாத்தி உள்ளனர்.

மே 09 ஆம் திகதி இடம்பெற்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவுக்கு எதிரான போராட்டத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள வீடு தீயிட்டு கொழுத்தப்பட்டமை தொடர்பாகவே இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் இதே தினத்தில் வெளியிட்ட டுவிட்டர் செய்தியொன்று தொடர்பாகவே அவரிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

02 »»

## மீண்டும் இயங்கும் சபுகஸ்கந்த சுத்திகரிப்பு



இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலைய நடவடிக்கைகளை இன்று முதல் ஆரம்பித்துள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தற்போது 100,000 மெட்ரிக் தொன் கச்சா எண்ணெய் இறக்கப்பட்டு வருவதாகவும், அடுத்த வாரம் மேலும் 120,000 மெட்ரிக் தொன் கச்சா எண்ணெய் வரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## பழிவாங்கப்படும் டளஸ் குழு

(ரிஹ்மி ஹக்கீம்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குள் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற

02 »»

## "நமது வரலாற்று ஆளுமைகள்" ஸக்கியா சித்தீக் பரீதின் நூல் வெளியீடு



02 »»

## பல்கலை மாணவர் தாக்குதலுக்கு ஐ.ம.சக்தி கடும் கண்டனம்



(ரிஹ்மி ஹக்கீம்)

அமைதியான பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாணவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின்

02 »»

## வசந்த முதலிகே உட்பட மூவர் இன்று டீ.ஐ.டி. யிடம் ஒப்படைப்பு

பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் வசந்த முதலிகே உட்பட மூவர் இன்று பயங்கரவாத தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெவித்தன.

வசந்த முதலிகே, கலவெவ ஸ்ரீ ரம்ம தேரர், அசான் குணதிலக ஆகிய மூவரும் தற்போது பேலியகொட பொலிஸ் பிரிவில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

72 மணிநேர காலம் இன்றுடன் நிறைவு பெறுவதால் இன்று முதல் 90 நாட்களுக்கு தடுத்து வைக்கப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தாமதமடையும் கோட்டா வருகை

ரணிலுடன் தொலைபேசியில் உரையாடல்

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, இம்மாத இறுதியில் நாடு திரும்புவார் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், அவரின் வருகை அடுத்த மாதம் (செப்டெம்பர்) வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், கோட்டாபய ராஜபக்சவுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற தொலைபேசி உரையாடலின் பின்னரே, கோட்டாவின் வருகை பிற்போடப்பட்டுள்ளது.

அதேவேளை, கோட்டாபய ராஜபக்சவின் வீடு அமைந்துள்ள மிரிஹான பகுதியிலும், அதனைச் சூழவுள்ள பகுதியிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்குமாறு பொலிஸார் மற்றும் புலனாய்வு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகள் விசேட கண்காணிப்பில் வைக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## "பாராளுமன்றத்தைக் கலைத்து, மக்கள் ஆணையை அனுமதிப்போம்" தேசிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட்ட பேரணி




பாராளுமன்றத்தைக் கலைத்து மக்கள் ஆணையை அனுமதிப்போம் என்ற தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தி, நுகேகொட விஜேராம சந்தியில் இருந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணியும் பொதுக் கூட்டமும் இடம்பெற்றது. தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க மற்றும் அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்.

Collaborate with...
SIYANE NEWS
www.siyanenews.com | facebook.com/Siyanemediacircle | twitter.com/SivaneNews | Siyane Media Circle
SIYANE MEDIA CIRCLE (PVT) LTD
No. 41, Kahatowita, Veyangoda.
SIYANE Media Circle
SIYANE MEDIA CIRCLE
KAHATOWITA
GA 00213489
மாற்றத்தை நோக்கிய பயணம்

## “நமது வரலாற்று ஆளுமைகள்” (முன்பக்கத் தொடர்ச்சி...)





கலாபூஷணம் ஸக்கியா சித்தீக் பரீட் எழுதியுள்ள “நமது வரலாற்று ஆளுமைகள்”என்ற நூலின் வெளியீட்டு விழா, நேற்று (20) கொழும்பு, தபால் தலைமையக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

## ரணில் வீடு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ரவூப் ஹக்கீம் வெளியிட்ட டுவிட்டர் செய்தியும் தனது வீடு பற்ற வைக்கபடுவதற்கு காரணமாக அமைந்திருந்ததாக அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே நேரம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருனிகா பிரேம சந்திரனையும் விசாரணைக்காக அழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பலிவாங்கப்படும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினருமான டளஸ் அழகப்பெரும தலைமையில், செயற்படும் சுயாதீன அணிக்கு எதிராக அக்கட்சியினால் தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

ஆரம்ப கட்டமாக பாராளுமன்ற குழுக்களிலிருந்து இந்த சுயாதீன அணியின் உறுப்பினர்கள் நீக்கப்பட்டு வருகின்றனர். முன்னாள் அமைச்சர்களான டளஸ் அழகப்பெரும மற்றும் ஜீ.எல். பீரிஸ் ஆகியோர் பாராளுமன்ற அலுவல்கள் குழுவில் கடந்த பல வருடங்களாக உறுப்பினர்களாக இருந்து வரும் நிலையில், கடந்த வாரம் சபாநாயகரினால் அறிவிக்கப்பட்ட புதிய குழுவில் அவர்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா மற்றும் நாலக கொடஹேவா ஆகியோர் பாராளுமன்ற நிதிக் குழுவிலிருந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் நீக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கோப் குழுவின் பெயர்ப் பட்டியல் அடுத்த வாரம் சபாநாயகரால் பாராளுமன்றத்தில் அடுத்த வாரம் அறிவிக்கப்படவுள்ள நிலையில், கோப் குழுவின் முன்னாள் தலைவரான பேராசிரியர் சரித ஹேரத், புதிய குழுவின் உறுப்பினராகக் கூட நியமிக்கப்படவில்லை.

இவ்வாறு சுயாதீன அணியினர் ஓரங்கட்டப்படுவது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிற்கு முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும கடிதமொன்றை எழுதியுள்ளார்.

மேலும் குறித்த நடவடிக்கைகளின் பின்னணியில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ செயற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஊடகவியலாளர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பேசக்கூடிய தன்மை கொண்டிருந்த சகோதரர் எஸ்.எல்.எம்.பிக்கீர் ஊடகத்துறையில் தனக்கான ஒரு அடையாளத்தை ஏற்படுத்தியிருந்தவர். ஆசிரியராக, பிரதி அதிபராக தனது தொழிலை கொண்டிருந்தாலும் கூட ஊடகத்துறையில் அதீத ஈடுபாடு கொண்ட ஆளுமையாக தன்னை நிலைநிறுத்திய அன்னார் சமூக சேவையிலும் தன்னை அதிகமாக ஈடுபடுத்திக் கொண்டவர். ஊடகத்தின் வாயிலாக இறக்காமம் பிரதேச மக்களினது மட்டுமின்றி பல பிரதேசங்களினதும் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுத்த வரலாறு அவருக்கு இருக்கிறது என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் விடுத்துள்ள அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது அனுதாப செய்தியில் மேலும், அம்பாறை மாவட்டத்தில் ஊடகத்தில் பிரகாசித்த சிரேஷ்ட ஊடகவியலாளர் இறக்காமத்தை சேர்ந்த சகோதரர் எஸ். எல்.எம்.பிக்கீர் (வயது 59) இன்று காலை காலமானார் எனும் செய்தியறிந்து மிகவும் கவலையடைந்தேன். சகோதரர் பிக்கீர் அவர்களின் இழப்பினால் துயருற்ற குடும்பத்தினர், நண்பர்கள், ஊடகவியலாளர்கள் எல்லோருடைய கவலையிலும் நானும் இணைந்து கொள்வதுடன் அன்னாரின் நிறைந்த நல்லமல்களை ஏற்று பாவங்களை மன்னித்து உயர்ந்த ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தை வழங்க இறைவனிடம் பிராத்திப்பதுடன் அவரின் இழப்பை தாங்கிக்கொள்ளும் சக்தியை எல்லோருக்கும் வழங்கிட இறைவனை பிராத்திக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## பல்கலை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தான் கூறுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் இடையில் கடுமையான முரண்பாடு இருப்பதை மீண்டுமொரு முறை உறுதிப்படுத்தியுள்ளது. போராட்டம் கலைந்து போவதோடு மாத்திரம் நிற்காது, மாணவர்கள் சிலரை கைது செய்தும், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே மாணவர் உட்பட மேலும் சிலரை தடுப்புக்காவல் உத்தரவின் பிரகாரம் தடுப்புக்காவலில் வைப்பதையும் ஐக்கிய மக்கள் சக்தியாக வன்மையாக கண்டிக்கிறோம்.

அமைதியான போராட்டங்களுக்கு இடையூறு ஏற்படாது என ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தொடர்ந்தும் வலியுறுத்தினார்.

அரசியலமைப்பில் மற்றும் சர்வதேச சமவாயங்களின் பிரகாரமைந்த கடமை மற்றும் பொறுப்புக்கூறலுக்குட்படும் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடல், போராட்டம் நடத்துதல் போன்ற ஜனநாயக உரிமைகள் அவசரகாலச் சட்டத்தை விதித்து நசுக்கப்படுகின்றன என்பதுதான் நடக்கிறது. இந்த அடக்குமுறைக்கு எந்த நியாயமான காரணத்தையும் அரசாங்கம் வழங்கத் தவறிவிட்டது.

இந்தப் போராட்டத்தில்,

பல்கலைக்கழகங்களை உடனடியாகத் திறக்க வேண்டும் எனவும், நாட்டு மக்கள் வாழ்வதற்கு ஏற்ற பொருளாதாரத் திட்டத்தைத் தயாரிக்குமாறும், சுதந்திரமாக வாழ்க்கைத் தொழிலைத் தொடர்வதில் உள்ள தடைகளில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றே போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர். அந்தக் கோரிக்கைகளுக்குப் பதில் சொல்லாத அரசு அமுல்படுத்தும் அடக்குமுறை செயல்பாட்டில் ஒரு மறைமுக நிகழ்ச்சி நிரல் இருப்பது தெளிவாகத் தெரிகிறது. இவை அனைத்தும் கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தியால் வழிநடத்தப்படுகின்றன என்று நாங்கள் நம்புகிறோம். இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் சமூகத்தில் அச்சத்தை ஏற்படுத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை செயழிலக்கச் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

அரசாங்கத்தின் அடுத்த நிகழ்ச்சி நிரலில் செயல்படுத்தப்படும் பல திட்டங்கள் சமூகத்தில் கடுமையான பதற்றத்தை உருவாக்குவது போல் தெரிகிறது. மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகள் மீண்டும் கங்கணம் கட்டிக்கொண்டு களமிறங்குகிறார்கள் என்பதும் தெளிவாகிறது. இவையனைத்தும் பொதுமக்களின் எதிர்ப்பையும் கோபத்தையும் தூண்டும் இடைக்கால ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளே தவிர நாட்டின் அடிப்படை நெருக்கடிகளுக்கு தீர்வுகளை வழங்கவில்லை என்பது தெளிவாகிறது.

அவசரகாலச் சட்டம் உடனடியாக நீக்கப்படும் என அறிவித்த ஜனாதிபதி, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஏழு மாவட்டங்களுக்கு முப்படை இராணுவத்தை அழைத்ததிலிருந்தும், அறிக்கைக்கும் செயலுக்கும் இடையிலான முரண்பாட்டையே காண்கிறோம்.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை முடக்கும் மற்றும் அரசியலமைப்புச் சட்டம் உத்தரவாதம் அளித்துள்ள சிறப்புறுரிமைகளை நசுக்கும் அனைத்து செயல்முறைகளையும் உடனடியாக மீளப் பெறுமாறு அரசை வலியுறுத்துகிறோம்.

அதோபோல்,தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள மாணவ செயற்பாட்டாளர்களை உடனடியாக விடுவிக்குமாறும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம்.

மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் சர்வ கட்சிகளின் ஆதரவை நாட்டின் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு என நேர்மையான அபிலாஷைகளை மனதில் கொண்டு கோரினால் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் அவ்வாறானவொன்றை சாதிக்க முடியாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என்று மேலும் தெரிவித்துள்ளார்.



# அமைச்சுப்பதவிகளுக்காக அன்றி நாட்டுக்காக ஜனாதிபதியுடன் மீண்டும் பேசத் தயார்!



பயனளிக்கும் மறுசீரமைப்பு செயற்பாட்டின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதியுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தத் தான் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வரப்பிரசாதங்கள் சலுகைகளைப் பெறுவதற்குப் பதிலாக பிரயோக ரீதியாக தலையிட்டு நாட்டைக் கட்டியெழுப்புவதே தமது நோக்கமாகும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கம் கொண்டு வரும் நேர்மறையான, முற்போக்கான முன்மொழிவுகளை ஆதரிக்கும் வகையில் ஒரு வேலைத்திட்டம் வடிவமைக்கப்படும் எனவும்,ஒருபோதும் மக்களின் எண்ணங்களுக்கும், விருப்பங்களுக்கும் துரோகம் இழைக்கமாட்டேன் எனவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டு கையிருப்பில் எஞ்சியுள்ள டொலர்களை அழிக்கும் செயற்பாட்டிற்கு ஒருபோதும் பங்களிக்கப்போவதில்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,தற்போது அனைத்து துறைகளிலும் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை கட்டியெழுப்ப பதவிகள் அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மறுசீரமைப்புகளுக்கான புத்திஜீவிகள் ஒன்றியத்தின் விசேட கூட்டம் இன்று (19) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

தற்போது நிலவும் சூழ்நிலையில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டம் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இதன்போது இடம் பெற்றது.



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் திருமதி ஜூலி சங்க் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் (19) கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இரு தரப்பினருக்கும் முக்கியமான பல விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியதுடன் நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலை குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவை நினைவுகூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர், இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக அமெரிக்கா நட்புறவையும் ஆதரவையும் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். ஜனநாயகம் பலப்படுத்தப்பட்டு மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் ஒரு நாட்டிற்கு அமெரிக்காவின் ஆதரவு கிடைக்கும் என தூதுவர் தெரிவித்தார்.

## ஊடக உபகரணம் அன்பளிப்பு!

பொதுப்பணிகளை ஊக்கவிக்கும் முகமாக சமூக செயற்பாட்டாளர் விஞ்ஞான முதுமானி அஸ்மி யாசீன் அவர்களினால் “சம்மாந்துறை ட்ரென்ட்“ ஊடக அமைப்பிற்காக ஊடக உபகரணம் அன்பளிப்பாக நேற்று (20) வழங்கி வைக்கப்பட்டது.

“சம்மாந்துறை ட்ரென்ட்“ எனும் ஊடக அமைப்பினரால் வேண்டிக்கொள்ளப்பட்ட கோரிக்கையின் நிமித்தம் இந்த உபகரகணம் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த ஊடக அமைப்பினரால் மேற்கொள்ளப்படவுள்ள குத்பா பிரசங்கங்களை நேரடியாக ஒளிபரப்பு செய்யும் ஊடக செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாகவே இவ் உபகரணம் அன்பளிப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# பின்னாட்களில் மனச்சாட்சி உறுத்தும் மறுபக்கத்தையும் கவனத்திற்கொண்டு ஊடகவியலாளர்கள் மனிதாபிமானத்துடன் பணியாற்ற வேண்டும்

## மட்டு. மாவட்டச் செயலாளர் கருணாகரன் ஆலோசனை!







(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

பின்னாட்களில் மனச்சாட்சி உறுத்தும் மறுபக்கத்தையும் கவனத்தில் கொண்டு ஊடகவியலாளர்கள் மனிதாபிமானத்துடன் பணியாற்ற வேண்டும் என மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கே. கருணாகரன் ஊடகவியலாளர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் முஸ்லிம் சமூக ஊடகவியலாளர்களுக்கு ஊக்கவிப்பு உதவித் தொகை வழங்கி வைக்கும் நிகழ்வில் அவர் உரையாற்றினார்.

தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான வாமதேவன் தியாகேந்திரனிடம் கல்குடா மீடியா போரம் தலைவர் எம்.ரீ.எம். பாரிஸ் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க மாவட்டத்திலுள்ள 30 ஊடகவியலாளர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் ஊக்குவிப்புத் தொகை வழங்கி வைக்கப்பட்டது.

ஏறாவூர் நகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் நிஹாறா, தியாகி அறக்கொடை நிதியத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளரும் வவுனியா இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளருமான எம்.என். நைறூஸ், கலாசார உத்தியோகத்தர் எஸ்.ஏ.எம். நளீம ஆகியோரின் பிரசன்னத்துடன் நிகழ்வு இடம்பெற்றது.

அங்கு தொடர்ந்து ஊடகவியலாளர்களை விழித்து உரையாற்றி மாவட்டச் செயலாளர் கருணாகரன்,

இந்த ஊக்குவிப்பு உதவு தொகையை உங்களுக்கு வழங்கிய தியாகேஸ்வரன் ஒரு பரோபகாரி. அடுத்தவருக்கு இன மத பேதமில்லாமல் உதவும் கொடை வள்ளல்களில் அவரும் ஒருவர் என்பதை அவரது செயல்பாடுகளைக் கொண்டு அறிந்து கொள்ள முடிகிறது.

தற்போது நாடு முனம் கொடுத்திருக்கின்ற பொருளாதார நெருக்கடி மக்கள் எதிர்கொள்கின்ற பல்வேறு வகையான இன்னல்கள் இவற்றுக்கிடையே ஊடகவியலாளர்களின் பணி மிகவும் காத்திரமானது.

மிகவும் அவதானமாக முன்னெடுக்க வேண்டிய பணி இது. பொதுவாக மட்டக்களப்பு மாவட்டத்திலே பல்லின சமூக கலாசாரங்களைக் கொண்ட மக்கள் வாழ்கின்றார்கள்.

மிக விரைவாக அபிவிருத்தியை எதிர்பார்த்திருக்கின்ற ஒரு மாவட்டம். இந்த வேளையிலே தமிழ் முஸ்லிம் சமூக ஊடகவியலாளர்களை கச்சிதமாக ஒருங்கிணைக்கும் தொடக்கப் புள்ளியை செய்து வைத்தமைக்காக கல்குடா மீடியா போரம் எனது பாராட்டுக்கும் நன்றிக்கும் உரித்தாகின்றது.

பொதுவாக ஒரு சம்பவத்தைச் செய்தியாக்கிச் சொல்வதுதான் செய்தி என்கின்ற ஒரு காலகட்டம் ஒன்றிருந்தது.

செய்தியை எவ்வாறு வெளிக் கொண்டு வந்தால் சிறப்பாக இருக்கும் எனும் காலம் மாறிவிட்டது. தொலைத் தொடர்புத் துறையின் வளர்ச்சி காரணமாக இது நடந்துள்ளது. கஷ்டமான பணியை கச்சிதமாகச் செய்வதுதான் ஒரு சிறந்த ஊடகவியலாளரின் பணியாக இருக்கும்.

மனச்சாட்சி உறுத்தும் பக்கத்தையும் ஊடகவியலாளரிகள் பார்க்கத் தவறக் கூடாது.

எல்லாவற்றுக்கும் ஒரு எதிர்வினை உண்டென்பதுபோல ஒவ்வொன்றுக்கும் அடுத்த பக்கமும் உண்டென்பதை ஊடகவியலாளர்கள் புரிந்து கொண்டு செயலாற்றினால் சிறப்படைவீர்கள்.

மன உறுத்தல் காரணமாக தற்கொலை செய்து கொண்ட ஊடகவியலாளர்களின் வரலாறுகளும் நமக்குப் படிப்பினையாக உள்ளன.

செய்திகளைச் சேகரித்தோம் பிரசுரித்தோம் ஒலி ஒளிபரப்பினோம் என்றில்லாமல் மக்களால் கேள்வி கேட்கப்படும் ஒரு கட்டத்தில் மனச் சாட்சியால் பதில் சொல்ல முடியாமல் தடுமாறும் ஒரு நிலை வந்து விடக் கூடாது என்பதில் கவனமாக இருப்பதே சிறப்பு.

பல நல்ல விடயங்களை அதிகமதிகம் ஆக்கபூர்வமான விடயங்களை ஊடகவியலாளர்கள் வெளிக்கொண்டு வரவேண்டும். மனிதாபிமானம் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் சமூக மாற்றத்திற்காக நீங்கள் உங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

நல்லிணக்கம் இன சௌஜன்யத்துக்கு ஊடவியலாளர்களின் பணியும் பங்களிப்பும் இன்றியமையாதது. எதிர்காலத்தில் சமூகமும் இந்த மாவட்டமும் முழு நாடும் முன்னேறுவதற்கு முக்கிய காரணமாக இருக்கக் கூடியவர்கள் ஊடவியலாளர்கள்தான். இதனை நீங்கள் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். மனதில் பதிய வைக்கும் பல செய்திகளை நமது பழைய ஊடகவியலாளர்கள் மக்கள் மத்தியில் கொண்டு சென்றார்கள். அவர்களை இன்றளவும் காலம் மதிக்கிறது. உங்களையும் எதிர்காலம் மதிக்க நீங்கள் இப்பொழுதே மனிதாபிமானத்திற்கு முதலிடம் கொடுத்துப் பணியாற்ற வேண்டும்.” என்றார்.

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை தனி ஒவ்வொரு மனிதனும் நேசிப்பதன் மூலம் நாட்டில் நிலையான சமாதானத்தையும் அபிவிருத்தியை கொண்டு வரமுடியும் இதனை தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் செயலில் சாதிக்க முடியும் என கல்குடா மீடியா போரம் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம் பாரிஸ் தனது நிகழ்வின் தலைமை உரையில் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் அனைத்து இன மக்களுக்கும் பொதுவானவர்களாக பணியாற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

# மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு மாகாண சபைகளின் கீழ் இயங்காத நிறுவனங்களை உடனடியாக செயற்படுத்துங்கள்!

## பிரதமர் தினேஷ் குணவர்தன!



பிரதமர் தினேஷ் குணவர்தனவிற்கும் மாகாண ஆளுநர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று 19.08.2022 அன்று கொழும்பில் உள்ள பிரதமர் செயலகத்தில் இடம்பெற்றது.

சமீபகால வரலாற்றில் நாடு எதிர்நோக்கும் மிகவும் ஆபத்தான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள மத்திய அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் பணி ஒழுங்குக்கு முழு அரச சேவை, தனியார் சேவை மற்றும் மக்களின் ஆதரவு தேவை என பிரதமர் தினேஷ் குணவர்தன சுட்டிக்காட்டினார்.

டொலர் நெருக்கடிக்கு தீர்வு காணவும், மின்சக்தி துறையின் அடிப்படை பிரச்னைகளை தீர்க்கவும் அரசு எடுத்த துரித நடவடிக்கைகளால், மக்களுக்கு ஓரளவு நிம்மதி கிடைத்துள்ளது.

மாகாண சபைகள் பணத்தைப் பயன்படுத்துவதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அரச ஊழியர்களின் சம்பளம், அத்தியாவசியப் பணிகள் என அனைத்துச் செலவுகளிலும் முன்பை விட கவனமாக இருக்க வேண்டும்.

அனைத்து அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரச அலுவலகங்களில் அரச செலவுகள் தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மாகாண சபைகளின் செலவினங்களை மட்டுப்படுத்துவது தொடர்பில் ஆளுநர்கள் கவனம் செலுத்த வேண்டுமென பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொலைதூரப் பணியிடங்களுக்குச் செல்லும் உத்தியோகத்தர்களின் சேவையைப் பெறும்போது செலவுகளைச் சமாளிக்கும் வகையில் சேவையைப் பெற அதிக கவனம் செலுத்த வேண்டும்.

உரப்பிரச்சினைக்கு அரசால் ஓரளவு நிவாரணம் வழங்க முடிந்தது. முறையான மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறைமையின் கீழ் எதிர்வரும் காலங்களில் விவசாயிகளுக்கு அதிக சலுகைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. மாகாண சபைக்கு சொந்தமான விவசாயம் செய்யப்படாத காணிகளும், பயன்படுத்தப்படாத மாகாண சபை காணிகளும் அதிகளவில் இருப்பதாக எமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலத்தை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்துமாறும் ஆளுநர்களுக்கு பிரதமர் அறிவித்துள்ளார். இதற்கு உள்ளாட்சி அமைப்புகளும் தீவிரமாக பங்களிக்க வேண்டும். மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அதிக காலம் ஆளுநர்களால் ஆளப்படுகின்றன. எனவே, நடைமுறைத் திட்டத்துடன் விரைந்து செயல்பட வேண்டியது அவசியம்.

அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டுமென சுட்டிக்காட்டிய பிரதமர், சில மாகாண சபைகளில் ஆட்சேர்ப்பு மற்றும் சம்பள கொடுப்பனவுகள் முறைமைக்கு புறம்பாக இடம்பெற்றுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதோடு, அவை பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

நாட்டை ஸ்திரப்படுத்தும் வேலைத்திட்டத்திற்கு மாகாண சபைகளின் ஆதரவு மிகவும் அவசியமானது எனவும், துரிதமாக முடிவெடுத்து அமுல்படுத்துவது அவசியம் எனவும் பிரதமர் தெரிவித்தார். மின்சார நெருக்கடியை தீர்க்கும் வகையில் புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை உருவாக்குவதற்கு மாகாண சபைகள் அதிக பங்களிப்பை வழங்க முடியும் எனவும் அதன் மூலம்

நாட்டின் வருமானத்தை சேமிக்க முடியும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

கூட்டுறவு இயக்கம் தற்போது செயலிழந்து விட்டதாகவும், சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன் கூட்டுறவு முறையை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்றும் ஆளுநர்களிடம் பிரதமர் வலியுறுத்தினார். எதிர்காலத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு கிடைக்கும் என நம்புவதாகவும், வெளிநாட்டு முதலீடு மற்றும் அந்நிய செலாவணியை அபிவிருத்தி செய்யக்கூடிய துறைகளில் ஆளுநர்கள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

மாகாண சபைகளில் விவசாயம், ஏற்றுமதிப் பொருட்களின் மேம்பாடு, முதலீட்டு வாய்ப்புகளை விஸ்தரித்தல் மற்றும் அந்தந்த மாகாணங்களைப் பாதிக்கும் ஏனைய பிரச்சினைகள் உள்ளிட்டவைகள் தொடர்பில் ஆளுனர்கள் பிரதமருக்கு விளக்கமளித்தனர்.

பிரதமரின் செயலாளர் அனுர திஸ ாநாயக்க, அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னே, தென் மாகாண ஆளுநர் வில்லி கமகே, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே. முஸ ம்மில், மேல்மாகாண ஆளுநர் ரொஷ ான் குணதிலக்க, வடமேல் மாகாண ஆளுநர் வசந்த கரணகொட, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் மாகாண செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# சாய்ந்தமருது பிளைங் கோர்ஸ் விளையாட்டு கழகம் வெற்றி








கல்முனை லெஜன்ஸ் விளையாட்டு கழகம் நடாத்துகின்ற ரீ20 தொடரின் குழு நிலை போட்டியில் எதிர்த்து கல்முனை ரினோன் விளையாட்டு கழகம் எதிர்த்தாடிய சாய்ந்தமருது பிளைங் கோர்ஸ் விளையாட்டு கழகம் வெற்றியை தனதாக்கியது.

கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ரினோன் அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 91 ஓட்டங்களை பெற்றனர். பதிலளித்தாடிய சாய்ந்தமருது பிளைங்கோர்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் 16.3 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 92 ஓட்டங்களைப் பெற்றனர். அதனடிப்படையில் 5 விக்கெட்டுகளால் பிளைங்கோர்ஸ் அணி வெற்றி பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை அமினாஸ் ஜ/வல்லரி நிறுவனத்தின் பிரதமர் நிறைவேற்று பணிப்பாளரும், சமூக செயற்பாட்டாளரும், முகாமைத்துவ பட்டதாரியுமான முஹமட் கியாஸ் கலந்து சிறப்பித்து, போட்டியின் ஆட்ட நாயகனுக்கு விருதும் வழங்கி கௌரவித்தார்.



NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2022 AUGUST 21 - SUNDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

# கபூரிய்யா அரபிக் கல்லூரி தொடர்ந்தும் முஸ்லிம் சமூகத்தின் சொத்தாகவே பாதுகாக்கப்பட வேண்டும்

மஹரகம கபூரிய்யா அரபிக் கல்லூரியை பாதுகாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக அதன் பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து கடந்த பல வருடங்களாக போரடி வருகின்றனர். பலவிதமான சவால்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் இந்த கபூரிய அரபிக் கல்லூரி (மத்ரசா) தொடர்ந்தும் அதன் பணியை மேற்கொண்டு வருகின்றது.

வருடாந்தம் 30 - 35 வரையான மாணவர்கள் இந்த மத்சாவில் இஸ்லாமிய சன்மார்க்க கற்கை நெறியை பயில்வதற்காக தெரிவு செய்யப்படுகின்றனர். இவர்கள் 06 வருடங்களை பூர்த்தி செய்கின்ற போது மௌலவி அல் ஆலிம் என்ற பட்டம் வழங்கப்படுகின்றது. பாடசாலையில் 08 ஆம் வகுப்பிற்கு சித்தியடைகின்ற போது அல்லது 08 ஆம்வகுப்பை பூர்த்தி செய்கின்ற மாணவர்களில் இருந்து மேற்படி வருடாந்தம் 35 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு குறிப்பிட்ட 06 வருடங்களும் அரசாங்கத்தின் கல்வித் திட்டத்திற்கமைவாக கற்பித்த லுடன் இஸ்லாமிய சன்மார்க்க போதனையும் வழங்கப்படுகின்றது.

இவ்வாறாக இங்கிருந்து வெளியாகின்றவர்கள் வெறுமனே இஸ்லாமிய சன்மார்க்க போதகர்களாக மாத்திரம் மிளிராது நாட்டின் தேவைக்கு ஏற்ப தம்மை நெறிப்படுத்திக் கொண்டவர்களாக தற்கால அறிவுச் சந்தையில் நிலவுகின்ற போட்டி நிலைக்கு முகம் கொடுக்கும் திறமை, ஆளுமை, ஆற்றல், வல்லமை பெற்றவர்களாக வரவேண்டும் என்ற அடிப்படையில் பாட போதனைகள் அமைந்திருக்கின்றன.

இந்த அரபிக் கல்லூரி 1931 ஆம் ஆண்டு கொடை வள்ளலும், சமூக சிந்தையாளரும் பிரபல வர்த்தகருமான என்.டி.எச். அப்துல் கபூர் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டதாகும். மிகவும் சிறந்ததும் முஸ்லிம் சமூகத்தின் தேவையை ஈடு செய்யக்கூடியதுமான தூர நோக்கம் கொண்ட சிந்தனையுடன் அப்துல் கபூர் ஹாஜியார் இந்த அரபுக் கல்லூரியை ஆரம்பித்துள்ளார்.

இந்த அரபிக் கல்லூரி அமைந்துள்ள மஹரகமையில் இருக்கின்ற 35 ஏக்கர் காணியில் 17 அரை ஏக்கர்களை அரபிக் கல்லூரிக்காகவும் மீதி 17 - ஏக்கர் காணியை கொழும்பு சாஹிராக் கல்லூரிக்கும் வக்ப் செய்துள்ளார். அத்துடன் அரபிக் கல்லூரியை நடத்திச் செல்வதற்கான வருமான வழியாக கொழும்பு கிரேன்பாசில் மைந்துள்ள ஸூலைமான் தனியார் வைத்தியசாலை அமைந்துள்ள காணியைக் வழங்கி அதில் இருந்து கிடைக்கின்ற வருமானத்தை பயன்படுத்த வேண்டும் என்று குறித்து வைத்திருந்தார். இப்படிப்பட்ட முஸ்லிம் சமூகத்திற்காக உழைத்த மகான் கபூர் ஹாஜியார் 1948 ஆம் ஆண்டு இறையடி சேர்ந்தார். அதே நேரம் அந்த அரபிக் கல்லூரியை நடத்திச் செல்வதற்காக 10 பேர்களைக் கொண்ட ஒரு நிதியமும் அமைக்கப் பட்டிருந்ததாக அதன் பழைய மாணவர்களால் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் இந்த அரபிக் கல்லூரி இன்றைய நிலையில் எதிர்நோக் குகின்ற சவால்கள் பற்றி தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும் இப்படியாக இலங்கை திருநாட்டில் சுமார் கி.பி. 06 ஆம் நூற்றாண்டில் இருந்து பரவி வளர்ந்து வரும் இஸ்லாமிய சன்மார்க் கத்தை பாதுகாத்து நிலை நிறுத்துவதற்கான தகைமையும் திறமையும் அறிவாற்றலும் மிக்க மௌலவிமார்களை உருவாக்க வேண்டும் என்று ஆரம்பிக்கப்பட்ட அரபிக் கல்லூரி அதன் ஸ்தாபகரின் மறைவின் பின்னர் தற்போது பலவிதமான சவால்களையும் நெருக்கடிகளையும் சந்தித்து வருவது மிகவும் வேதனையையும் கவலையையும் தோற்றுவித் திருக்கின்றது.

ஆரபிக் கல்லூரிக்காக வக்ப் செய்யப்பட்டுள்ள சொத்தை தமது சொந்த சொத்தாக உரிமை கோருவதற்காக அதனை நடத்தும் கபூர் அவர்களின் 03 ஆவது பரம்பரை திடசங்கட்பம் பூண்டிருப்பதாலே இத்தகைய துர்ப்பாக்கிய நிலையும் நெருக்கடியும் ஏற்பட்டிருக்கின்றது. அதனை நடத்தும் 05 பேர்களைக் கொண்ட நம்பிக்கை நிதியம் (ட்ரஸ்ட்) அரபிக் கல்லூரிக்கான சொத்துக்கள் அவர்களது சொந்த சொத்தாக வேண்டும் என்று அவற்றை சுவீகரிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருவதை அறிய முடிகின்றது. கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் என்ற அடிப்படையில் வெறுமனே அரபி மொழி போதனையோடு இந்த மத்ரசாவை வரையறுக்க வேண்டும் என்ற நோக்கில் செயற்படும் ஒரு குழு நவீன கால கல்வி பொதனைகளுக்கு எற்பட மத்ரசாவில் மௌலவிமார்களுக்கு வழங்கப்படுகின்ற அறிவு, வழிகாட்டல், பயிற்சிகள் உட்பட பல நடவடிக்கைகளையும் சட்டவிரோதமான செயலாக அத்தகையவர்கள் நோக்குவதும் சம்பிரதாய இஸ்லாமிய போதனை முறையில் இருந்து விலகி காலத்தின் தேவைக்கு ஏற்ப நவீனத்துவம் புகுத்துவதற்கு எதிராக நடவடிக்கைகளை விஸ்தரித்திருப்பது பாரிய சவாலாக அமைந்திருக்கின்றது.

கபூரிய்யாவின் பழைய மாணவர்கள் அரபிக் கல்லூரிக்கான 17 அரை ஏக்கர் நிலமும் கல்லூரியும் முஸ்லிம் சமூகத்திற்கான பொதுச் சொத்தாக வேண்டும் என்று குரல் எழுப்பி வருகின்றனர். அந்த முயற்சியின் காரணமாக தற்போது வக்ப் சபை, உயர் நீதிமன்றம், நியாயத் தீர்ப்பு சபை என்று போக வேண்டிய பல இடங்களில் 14 இற்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவாகி விசாரணைகள் தொடர்கின்றன. இந்நிலையில் இந்த கல்லூரியை நடத்துவதற்கான வளங்களும் பழைய மாணவர்களாலே திரட்டப்பட்டு வருவதை அறிய முடிகின்றது. மாதாந்தம் சுமார் 12 இலட்சம் ரூபா அளவில் இந்த மத்ரசாவை நடத்திச் செல்வதற்கு மாத்திரம் செலவாவதாக அறிய முடிகின்றது.

இவ்வாறான ஒரு நிலையில் கபூரிய்யாவின் நிதியம் (5 ஆநஅடிநச வுசரளவ) மத்ரசாவிற்கான சொத்துக்களை அவர்களது குடும்பத்திற்குரிய சொத்துக்கள் என்று எழுதிவைத்துக் கொண்டு அதனை சுவீகரிக்க அல்லது வர்த்தக நோக்கத்திற்காக பயன்படுத்த முயற்சி மேற்கொண்டு வருவதை கபூரிய்யாவின் பழைய மாணவர்கள் கடுமையாக ஆட்சேபிக்கின்றனர். அதே நேரம் இத்தகைய ஒரு பின்னணியிலேயே தான் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்திற்கு பொது பல சேனா, ராவனா பலய, சொஹொன பலகாய போன்ற சிங்கள தீவிரவாதிகளால் பாரிய நெருக்கடி ஏற்பட்ட போது இந்த கபூரிய்யாவையும் அந்த வலையில் சிக்க வைப்பதற்கான முயற்சியும் அதனை மூடச் செய்வதற்கான முயற்சிகளும் திரைமறைவில் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

இலங்கையில் தலைநகரில் உள்ள பல சொத்துக்கள் அன்று வாழ்ந்த முஸ்லிம் சமூகத்தின் தலைவர்களான டி.பி. ஜாயா, சேர் ராசிக் பரீட், மாகான் மாக்கார், அப்துல் கபூர் உட்பட முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பல தலைவர்களால் சமூக நலன் கருதி அன்பளிப்பாக (வக்ப்) செய்யப்பட்ட சொத்துக்களாக உள்ள நிலையில் இன்று இந்த கபூரிய்யாவை கபலீகரம் செய்ய எடுக்கப்படும் முயற்சியை தடுத்து நிறுத்தி அதனை அன்றைய பெருந்தகை கபூர் அவர்கள் எந்த சமூக நோக்கத்திற்காக விட்டுக் கொடுத்தாரோ அந்த நோக்கத்திற்காக தொடர்ந்தும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது முஸ்லிம் சமூகத்தின் கோரிக்கயைாகும். கபூரிய்யாவும் அதன் சொத்துக்களும் தொடர்ந்தும் முஸ்லிம் சமூகத்திற்கான சொத்தாக பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் இருவேறுபட்ட கருத்து இருக்க முடியாது.

எவ்வாறாயினும் நெருக்கடிக்கு காரணமான தரப்பினரும் யதார்த்தத்தை புரிந்துகொண்டு இந்த அரபிக் கல்லூரிக்கு சாவுமணி அடிக்காமல் சுமுகமான முறையில் பிரச்சினைகளை அனுகி சமூக நலனில் அக்கரை உடையவர்களாக கபூர் ஹாஜியாரின் இலட்சியத்தை நிறைவேற்று பவர்களாக மாற எல்லாம் வல்ல அலல்ாஹ் அருள் புரிய வேண்டும் என்பதே எமது இலட்சியமும் ஆகும். அதற்காக முஸ்லிம் சமூகத்தின் கல்விமான்கள், அரசியல்வாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட எல்லாத் தரப்பினரும் கபூரிய்யாவுக்காக ஒன்றுபட்டு ஒத்துழைக்க முன்வர வேண்டும்.

# அடிக்கடி வேறு வேறு அமைச்சுக்களின் கீழ் நிறுவனங்கள் மாற்றப்படுவதால் நிலையான அபிவிருத்தியை மேற்கொள்ள முடிவதில்லை

## சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்




(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

அரதச நிறுவனங்கள் அடிக்கடி வேறு வேறு அமைச்சுக்களின் கீழ் மாற்றப்படுவதால், இவ்வாறு செய்வதால், அமைச்சின் செயற்பாடுகளை வினைத்திறனுள்ளதாக மேற்கொள்ள முடிவதில்லை என சுற்றாடல் அமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இது விடயமாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர், அமைச்சுக்களின் செயற்பாடுகளை வினைத்திறனுள்ளதாக மாற்றுவதற்கு குறித்தொதுக்கப்படும் நிறுவனங்கள் ஆகக்குறைந்தது பத்துவருடங்களுக்காவது அதே அமைச்சின் கீழ் செயற்பட வேண்டும்.

ஆகக்குறைந்தது பத்து வருடங்களுக்காவது ஒரே அமைச்சின் கீழ் குறித்தொதுக்கப்படும் இலாகாக்கள் இருக்க வேண்டும். இவ்வாறு நிலையாக எந்த இலாகாக்களும் ஒரே அமைச்சின்கீழ் இருப்பதில்லை. அமைச்சுக்கள் மாற்றப்படும்போது அங்குள்ள நிறுவனங்களும் மாற்றப்படுகின்றன. சில அரசியல்வாதிகள் தங்களது தேவைகளுக்காக இவ்வாறு நிறுவனங்களை தமது அமைச்சின் கீழ் தருமாறு கோருகின்றனர்.

அமைச்சுக்கள் அதிகரிக்கப்படுகின்ற போதும் இதே நிலையே ஏற்படுகிறது. ஏதாவதொரு இலாகாவை (நிறுவனம்) வழங்கியே ஆக வேண்டும் என்பதற்காகவும், இவ்வாறு ஒரு அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனம் இன்னொரு அமைச்சுக்கும் அந்த அமைச்சிலிருக்கும் நிறுவனம் வேறொரு அமைச்சின் கீழும் கொண்டு வரப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சுற்றாடல்துறை அமைச்சு இருந்தபோது, இருபது இலாகாக்கள் இருந்தன. இப்போது, இரண்டு நிறுவனங்களே தற்போது எனக்குக் கீழ் உள்ள சுற்றாடல் அமைச்சின்கீழ் உள்ளன. அதேவேளை சம்பந்தப்பட்ட அமைச்சுக்குப் பொருத்தமான நிறுவனங்கள்தான் ஒரு அமைச்சுக்கு வழங்கப்பட வேண்டும்.

தற்போது எனது அமைச்சு நாட்டின் கனிம வளங்கள் உள்ள சகல பகுதிகளையும் அடையாளம் கண்டு வைத்துள்ளது. தேவையான முதலீட்டாளர்கள் அங்கு முதலீடு செய்வதற்கான அனுமதி வழங்கப்படும்.

நில அகழ்வுகளில் ஈடுபடுவதற்காக 64 முதலீட்டாளர்கள் அனுமதி பெற்றுள்ளனர். ஆனால், இவர்களில், 47 பேர் எந்த செயற்பாடுகளிலும் ஈடுபடாமல் அனுமதிப்பத்திரங்களை வேறு விதமாக பயன்படுத்தி வருகின்றனர். இவர்களின் அனுமதி இரத்துச்செய்யப்படவுள்ளது.

2023 ஆம் ஆண்டில், ஒரு பில்லியன் டொலர் எமது அமைச்சின் கீழான நிறுவனங்களின் செயற்பாடுகளில் முதலீடு செய்யப்படும் என எதிர்பார்க்கிறோம். இதனைக் கருத்திற்கொண்டுதான் அமைச்சின் கீழுள்ள இலாகாக்களின் அதிகாரிகளுடன் மாதாந்தம் சந்திப்புக்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது" என்றார்.

# தி லெஜன்ட் ப்ரீமியர் லீக் - 2022: வெற்றிவாகை சூடியது லெஜன்ட் சலேஞ்ஞர்ஸ் அணி



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

The Legend College இனால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான The Legend Premier league - 2022 கிரிக்கெட் சுற்றுப் போட்டி இந்நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ரி ஆப்தீன் தலைமையில் பேருவளை நளீம் ஹாஜியார் மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

ஓர் அணிக்கு 11 வீரர்கள் என்ற அடிப்படையில் 10 அணிகள் களமிறங்கிய இச் சுற்றுப் போட்டியில், சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி Legend Challengers மற்றும் டுநபநனே ஞரிநச முடைபௌ அணியினர் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகினர்.

இதில் முதலாம் இடத்தினைப் பெற்று, ஆசிரியர் ஸர்ஹான் தலைமையில் விளையாடிய டுநபநனே ஊாயடடநபெநசள அணியினர் வெற்றிக் கிண்ணத்தைத் தம் வசப்படுத்திக் கொண்டனர். மேலும், இரண்டாம் இடத்தினை ஆசிரியர் அஸ்வின் தலைமையில் விளையாடிய டுநபநனே ஞரிநச முடைபௌ அணியினர் பதிவு செய்தனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹமட் சாதிக், மற்றும் கௌரவ அதிதியாக மனித உரிமை அமைப்பின் உறுப்பினரும் தேசிய இளைஞர் சேவை கவுன்சில் உறுப்பினரும் இளைஞர் பாராளுமன்ற வேட்பாளருமான இஸ்திபிஷார் நஸீர், வுாந டுநபநனே ஊழடடநபந நிறுவனத்தின் தலைவர் அஷ்ரி ஆப்தீன் Physiotherapy வைத்தியர் ஹஸ்னா, அறிவிப்பாளர் ஏ.எம். இன்ஸாப் மற்றும் உயர்பீட உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்ததோடு, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் வருகை தந்திருந்தனர்.

இதன்போது மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் கிண்ணம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.



# தெளிவுக்கான தேடல்

**வாசகர்களே!**
உங்கள் பிரதேசங்களிலுள்ள பொதுவான பிரச்சினைகளையும் நியூஸ்ப்ளஸ் இன் தெளிவுக்கான தேடல் பகுதியூடாக வெளிக்கொண்டுவரலாம்.
செய்திக்குப் பொறுப்பானவரின் அங்கீகாரக்கடிதத்துடன் உங்கள் கட்டுரையையும் இணைத்து **editor@newsplus.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# மகரகம கபூரிய்யா பறிபோகுமா?

மர்ஹூம் அல்ஹாஜ் என்.டீ.எச். அப்துல் கபூர் அவர்களின் சிந்தனையில் 1931ம் ஆண்டுகளில் உருவானதே "மஹரகம கபூரிய்யா அரபுக் கல்லூரி" யாகும். இலங்கையின் முதன்மை அரபுக் கல்லூரிகளுள் ஒன்றான இக்கல்லூரி சுமார் 17.50 ஏக்கர் நிலப்பரப்பில் தனது சொந்த நிதியிலிருந்து தூர நோக்கோடும், இலங்கை முஸ்லிம்களின் சன்மார்க்க கல்விக்கெனவும் உருவாக்கப்பட்ட கல்லூரியாகும்.

இக்கல்லூரிக்கென 17.50 ஏக்கர் காணியையும் கற்றல் கற்பித்தல், விடுதி என ஏராலமான ஏற்பாடுகளையும் செய்த ஹாஜியார் அவர்கள், இக்கல்லூரி அதன் இலக்கை அடைந்து கொள்ள பொருளாதாரம் தடையாக ஒருபோதும் இருக்கக் கூடாது என எண்ணி, அதற்கென மத்திய கொழும்பு, கிரான்ட்பாஸில் (சுலைமான் வைத்தியசாலை அமைந்திருந்த) சுமார் 2.50 ஏக்கர் காணியையும் கல்லூரிக்கென வக்பு செய்தார்.

கல்லூரிக்காக மஹரகமையில் அமைந்துள்ள 17.50 ஏக்கர் நிலத்தையும், கொழும்பு கிராண்ட்பாஸில் அமைந்துள்ள சுமார் 2.50 ஏக்கர் நிலத்தையும் வக்பு செய்து, அதற்கான பராமரிப்பாளர்களாக தனது குடும்பத்தவர்கள் மாத்திரமே உள்வாங்கப்பட வேண்டும் என்ற எந்த நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. பிற்காலத்தில் இது ஒரு குடும்ப சொத்தாக கணிக்கப்படாது பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அவரது பறந்த சிந்தனையையும் தூர நோக்கத்தையும் காட்டுகிறது.

ஹாஜியார் அவர்களது காலத்திலே இங்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மாணவர்கள் தங்கி இஸ்லாமிய ஷரீஆ கற்கை நெறியினை கற்றனர். திறமையான சில மாணவர்களோடு ஹாஜியார் அவர்கள் அன்பாக நடந்து கொண்டதோடு, அவர்களது விஷேட திறமைகளை பாராட்டி பரிசில்களும் வழங்கியிருக்கிறார்.

மஹரகம காணியை மத்ரஸா நடவடிக்கைகளுக்காக வக்பு செய்ததன் பிற்பாடு அக்காணியிலிருந்து எந்த பொருளையும் சொந்தமாக்கிக் கொள்ளவோ எடுத்துச் செல்லவோ ஒருபோதும் விரும்பியதில்லை.

இலங்கை முஸ்லிம்களுக்காகவும், நாட்டிற்காகவும் பல தர்மங்களையும், வக்புகளையும் செய்த ஹாஜியார் அவர்கள் அவை எதிலுமே தனது பெயரையோ, புகைப்படத்தையோ பாவிப்பதை ஒருபோதும் விரும்பியதில்லை. எனினும் கபூரிய்யா அரபுக் கல்லூரிக்கு மாத்திரம் தனது பெயரை பாவிப்பதை மனதார அங்கீகரித்திருந்தார்.

(அன்னாரின் நற்கிரிகைகளை பொருந்தி மேலான ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தில் நிரந்தரமாக தங்கும் பாக்கியத்தினையும், அன்னாரின் வக்புகளை உலகஅழிவு நாள் வரை பாதுகாத்து நிரந்தர தர்மமாக அமையவும் அருள் புரிவானாக.)

1931ம் ஆண்டு முதல் 1938ம் ஆண்டு வரை அதன் ஸ்தாபக அதிபராக இந்தியாவைச் சேர்ந்த அலியா மரிக்கார் ஹஸரத் அவர்களும், 1938ம் ஆண்டு தொடக்கம் மௌலானா உமர் ஹஸரத் அவர்களும், 1963 முதல் ஷம்சுதீன் ஹஸரத் அவர்களும், 1982 முதல் 2010ம் ஆண்டு வரை அஷ்ஷெய்க் முபாரக் ஹஸரத் அவர்களும் அவர்களைத் தொடரந்து ஏ.ஆர்.எம்.மஹ்ரூப் ஹஸரத், எம்.எம்.எம்.ஸாபிர் ஹஸரத், எம்.எப்.எம்.ஹஸன் பாரிஸ் ஹஸரத் ஆகியோரும் தற்போது எஸ்.எம்.நபார் ஹஸரத் அவர்களும் கல்லூரி அதிபர்களாக பணியாற்றிவருகின்றனர்.

மர்ஹூம் மௌலானா உமர் ஹஸரத் மற்றும் மர்ஹூம் முபாரக் ஹஸரத் ஆகியோரது காலப்பகுதிகளில் கல்லூரியில் பல பௌதீக மாற்றங்கள் செய்யப்பட்டன. இக்காலப்குதியிலே கல்லூரியின் பாடவிதானம் சர்வதேச பல்கலைக்கழக கல்விக் கொள்கையோடு ஏற்புடைய தரத்திற்கு உயர்த்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் ஷைகுல் கபூரிய்யா போரட்டத்தில் அரசியல் தலைவர்கள், நலன்விரும்பிகள் என பலரும் பங்குபற்றி இந்த உடமையை பாதுகாத்தனர்.

கபூரிய்யா 1931ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை பழைய மாணவர்களின் உதவியுடன் மாணவர்களுக்கான இரண்டு விடுதிகள், மாணவர்கள் உணவுன்பதற்கான அறைகள், மிகவும் தரம் வாய்ந்த ஒரு நூலகம், விசாலமான ஒரு பள்ளிவாசல், புற்று நோய் வைத்தியசாலையில் கைவிடப்படும் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யவென ஜனாஸா நலன்புரிக் கட்டிடம், கல்லூரி காணியைச் சுற்றி பாதுகாப்பு மதில், பழைய மாணவர் சங்க காரியாலயக் கட்டிடம் என்பனவும் நிர்மாணிக்கப்பட்டன.

இக்காலப்பகுதியில் முகாமைத்துவ சபையின் முயற்சியால் சவுதி அரேபியா அரசாங்கத்தின் இலங்கைத் தூதரகத்தின் ஊடாக கல்லூரிக்கான புதிய நிர்வாக கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 14 மில்லியன் ரூபா காசோலையைப் பெற்று அமானா வங்கியில் கல்லூரி முகாமைத்துவ சபை கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. இப்பணத்தை பெற்றுக் கொண்டதும் கல்லூரி நம்பிக்கையாரின் ஒப்புதலுடனேயாகும். குறித்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு இன்றைய நம்பிக்கையாளர்கள் இன்றுவரை தடையாக இருப்பதும் இங்கு குறித்துச் சொல்லப்படவேண்டியதாகும்.

கல்லூரியை மேலும் தரமுயர்ந்த நிலைக்கு முன்கொண்டு செல்லப்படும் நோக்கில் நம்பிக்கையாளருக்கும், முகாமைத்துவ சபைக்குமிடையில் 09-05-2018ல் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒப்பந்தம் ஒன்றும் செய்து கொள்ளப்பட்டது. எனினும் நம்பிக்கையாளர் தரப்பிலிருந்து எதுவதி காரணமுமின்று அவ்வொப்பந்தம் ரத்துசெய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தாம் கற்ற கல்லூரிக்கு விசுவாமாகவும் மர்ஹூம் அப்துல் கபூர் ஹாஜியாருடைய இந்த வக்பு நிலையாக தொடரவேண்டுமென்ற நன்நோக்கிலுமே பழைய மாணவர்கள் இத்தனை நற்பணிகளையும் செய்துவருகின்றனர்.

எனினும் (2016 பிற்பட்ட காலப் பகுதியில்) ஜனாப் அஸ்மத் கபூர் அவர்களின் செயல்பாடுகளும் வார்த்தை பிரயோகங்களும் 90 வருட வரலாற்றைக் கொண்ட எமது கல்லூரியின் எதிர்காலம் குறித்து பயத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்துகிறது.

அஸ்மத் கபூர் அவர்கள் "கபூரிய்யாவுக்கு சொந்தமான இந்நிலம் வக்பு செய்யப்படவில்லை, அது எமது (தனியார்) உடமை, பழைய மாணவர்கள் அதனை அத்துமீறி கையப்படுத்திக் கொண்டுள்ளனர்" என அடிக்கடி கூறிவருகின்றார்.

இதுவரை பல இன்னல்களுக்கு மத்தியில் அல்லாஹ்வின் அருளால் பாதுகாக்கப்பட்டு வருகின்ற இந்த அறக்கட்டளையின் அனைத்து செயல்பாடுகளையும் இடைநிறுத்தி ருனுயு க்கு வழங்கிவிடுவோம் என பொறுப்பற்ற முறையில் பேசியதுமுண்டு.

மேலும் கல்லூரியோடு சம்பந்தப்பட்ட பழைய மாணவர்ளுக்கு அசௌகரிகங்களை ஏற்படுத்த பொலிஸில் முறைப்பாடுகளும் செய்துள்ளார். இதனால் முகாமைத்துவ சபை அங்கத்தினர்களும் கல்லூரியின் பழைய மாணவர்களும் பல அளௌசகரிகங்களை எதிர்கொள்கின்றனர்.

கபூரிய்யாவிற்கு சொந்தமான காணியில் அமைந்திருந்த சுலைமான் வைத்தியசாலை கட்டிடம் இடித்து அழிக்கப்பட்டு வேறொரு நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையிலோ அல்லது விற்பனையாகவோ வழங்கப்பட்டுமுள்ளது.

இதுவரை காலமும் கல்லூரி காணிகுறித்த அரச பதிவுகள் (Asessment) அனைத்தும் கல்லூரியின் பெயரிலே இருந்தன. எனினும் அன்மைக்காலமாக கல்லூரியின் நிலப்பரப்புக்கள் ஐந்து துண்டுகளாக பிரிக்கப்பட்டு நம்பிக்கையாளர்களது பெயர்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. இது இந்த வக்பு உடமைக்கு செய்யப்பட்ட பாரிய துஷ்பிரயோகமாகவே பார்க்கின்றோம்.

மேற்கூறிய விடயங்களை கருத்திற்கொண்டும், தற்சமயம் நம்பிக்கையாளர்களால் எமது கல்லூரி எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கானும் விதமாகவும், சென்ற 13-11-2018 வக்பு சபையின் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு இன்று பல வழக்குகளாக பரிணாமம் அடைந்துள்ளது. அதில் குறித்த ஒரு வழக்கில் முகாமைத்துவ சபை அங்கத்தினருக்கு எதிராக கிடைக்கப்பெற்ற இடைக்கால தடைஉத்தரவொன்றை பயண்படுத்தி நம்பிக்கையாளர்கள் கல்லூரியின் செயல்பாடுகளுக்கும் மாணவர்களின் கற்றல் நடவக்கைகளுக்கும் எதிராக பல செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதன் ஓர் அங்கமாவும் முதற்கட்டமாகவும், தற்போது கல்லூரியினுள் சுமார் 500 மீட்டர்களுக்கும் மேலான ஒரு நீண்ட மதிலைக்கட்டி கல்லூரியின் கட்டிடங்கள் உள்ள பகுதியையும், காணியையும் பிரிக்கின்ற பணியைச் செயதுள்ளனர். மேலும் கல்லூரியின் கட்டிடங்கள் அமைந்துள்ள பகுதிகளைத் தவிர மற்றைய பகுதிகளை விற்பது அல்லது குத்தகைக்கு விடுவது என்ற ஒரு நோக்கத்தில் இருப்பதாகவும் அறியமுடிந்தோம்.

உண்மையில் பூர்வீக வக்பான இந்த இடம் இவ்வாரான ஒரு மோசடியான நிலையில் பரிபோகும் என்றிருந்தால், இந்த நாட்டில் இருக்கின்ற ஏராளமான வக்புடமைகளுக்கும் ஒரு ஆபத்தான நிலை ஏற்படும் ஐயம் இருக்கிறது.

எனவே, நூற்றாண்டை அடையவுள்ள இந்த கல்லூரியையும் அதன் உடமையையும் காப்பாற்றப்பட வேண்டிய பொறுப்பு எம்மனைவர் மீதும் உள்ளது. மேலும் கொழும்பை அண்மித்துள்ள இக்கல்லூரி சர்வதேச தரம் வாய்ந்த ஒரு கலாசாலையாக மாறுவதற்கான சகல பௌதிக வளங்களையும், வசதிகளையும் கொண்டிருக்கின்ற ஒரே அரபுக் கல்லூரியாகும்.

இத்தனை சிறப்புகளையும் கொண்ட இக்கல்லூரி பின்தங்கிய நிலையில் இருப்தற்கு தற்போதைய நம்பிக்கையாளர்களே முழுப்பொருப்பையும் ஏற்க வேண்டும். அரபு நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களோடு இணைத்து தரமுயர்த்த பல சந்தர்ப்பங்கள் இக்கல்லூரியை வந்தடைந்த போதும் நம்பிக்கையாளர்களின் ஒத்துழைப்பின்மையால் அவை நலுவிச்சென்றன.

அன்று ஸாஹிராக் கல்லூரியின் உருவாக்கத்தில் இருந்த பெருந்தகைகளோடு மர்ஹூம் அப்துல் கபூர் ஹாஜியார் கொண்டிருந்த சிந்தனைத் தாக்காத்தாலே, அவ்வாரான ஒரு பின்னனியில் தலைசிறந்த ஒரு அரபுக் கல்லூரியை உருவாக்க எத்தனித்தார் என்பதை 1930 களில் கல்லூரி வளாகத்தில கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டிடங்களின் தரத்தை பார்க்கும் போது எளிதாக புரிந்து கொள்ள முடிகிறது.

எனவே பிற்பட்ட காலத்தில் கல்லூரியை நிர்வகித்தவர்களால் அந்த இலக்கை அடைய முடியாவிட்டாலும், கல்லூரியின் வளர்ச்சிக்கு பாதிப்பாக செயல்படவில்லை என்பது சற்று ஆறுதலாகவே இருக்கிறது. எனினும் தற்போது மர்ஹூம் அப்துல் கபூர் ஹாஜியாரின் மூன்றாவத தலைமுயையின் வாரிசுகளால் கல்லூரிக்கும் அதன் உடமைக்கும் ஏற்பட்டிருக்கும் ஆபத்திலிருந்தும் அழிவிலிருந்தும் பாதுகாக்க அனைவரும் ஒன்றினைந்து செயல்படுமாரு தாழ்மையாக கேட்டுக்கொள்கிறோம்.

**பழைய மாணவர் சங்கம்.**
**கபூரிய்யா அரபுக் கல்லூரி.**

# உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களுக்கும் சமூக பெண் தலைவர்களுக்கும் பன்மைத்துவப் பயிற்சிப் பட்டறை



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினராகவுள்ள பெண் உறுப்பினர்கள் மற்றும் சமூகங்களிலுள்ள பெண் தலைவர்களுக்குமான பன்மைத்துவம் மற்றும் ஒன்றிணைத்தல் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி மட்டக்களப்பில் தொடராக இடம்பெற்று வருவதாக தேசிய சமாதானப் பேரவையின் மாவட்ட சர்வமத செயற்குழு இணைப்பாளர் ஆர். மனோகரன் தெரிவித்தார்.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கல்லடியிலுள்ள தனியார் விடுதியில் சனிக்கிழமை 20.08.2022 இந்த விழிப்புணர்வு நிழ்வு இடம்பெற்றது.

மாவட்ட இணைப்பாளர் ஆர். மனோகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபை உள்பட உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த பெண் பிரதி நிதிகளும் சமூக பெண் தலைமைத்துவங்களுமாக சுமார் 40 பேர் கலந்து கொண்டனர்.

வளவாளராக பேராதனைப் பல்கலைக் கழக அரசறிவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர். ரமேஷ் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார்.

வீட்டில், சமூகத்தில், அரசியலில், நாட்டில் பன்மைத்துவம் மிளிர வேண்டுமானால் இன மத மொழி அரசியல் பாகுபாடு இல்லாத மனப்பாங்கு ஏற்பட வேண்டும், மனிதம் பேணப்பட வேண்டும்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 25 வீதமாக கோட்டா முறை பெண் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்பட்டதினால் இலங்கையில் 340 உள்ளூராட்சி மன்றங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 8000 பேரில் சுமார் 1900 பேர் பெண்களாக பிரதிநித்துவம் பெற முடிந்தது.

92 வீதம் எழுத்தறிவு கொண்ட இலங்கையின் சனத்தொகையில் சுமார் 53 வீதம் பேர் பெண்களாக உள்ளனர்.

பெண்களுக்கு அரசியலில் சமத்துவம் இல்லாத நிலைமை காணப்படுகிறது. நெருக்கடியை முகாமைத்துவம் செய்யும் ஆற்றல் பெண்களிம் உள்ளதால் எழுச்சிப் போராட்டங்கள் ஊடாக இலஞ்சத்தையும் ஊழலையும் ஒழிக்க முற்போக்கு சிந்தனையுள்ள பெண் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு மக்களுக்கு சேவையாற்ற முன்வரவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட பெண்கள், உள்ளூராட்சி மட்டத்தில் பன்மைத்துவத்தைப் பாதிக்கும் காரணிகள், பன்மைத்துவத்தைக் கட்டியெழுப்புவதில் பெண்களின் வகிபாகம் என்பன பற்றி அறிக்கைகள் பெறப்பட்டு தெளிவூட்டல் இடம்பெற்றது.

# பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வழியின்றி திண்டாடும் பாட்டாளி மக்கள்!



எம்.எஸ். அமீர் ஹுசைன்



புதிய ஜனாதிபதியாக ரனில் விக்கிரமசிங்கா பதவி ஏற்றதோடு புதிய அமைச்சரவையும் புதிய ஆட்சியும் மலர்ந்திருக்கின்றது. ஆனாலும் மக்களுக்கு புதிய வாழ்க்கைதான் இன்னும் மலரும் அறிகுறிகள் தென்படவில்லை. ரனில் விக்கிரமசிங்காவுக்கு ஜனாதிபதியாக வருவதற்கும் வாழ்க்கையில் நிறைவேறா திருந்த இறுதி இலட்சியத்தை அடைவதற்கும் கதவுகளை அகளத் திறந்து கொடுத்த ஏப்ரில் 09 ஆம் திகதி ஆரம்பமான குடியானவர்களான பாட்டாளி மக்களது போராட்டமான அப்போதைய ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ வுக்கு எதிரான புரட்சி முற்றுப் பெற்று இப்போது சில வாரங்களே ஆகின்றன. ஆனாலும் அந்த போராட்டத்திற்கு காரணமானாவர்கள் பலர் பதவிதமான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டும் புலனாய்வு துறையினரால் விசாரணை செய்யப்பட்டும் வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்கும் நிலை எற்பட்டிருக்கின்றது. கரையோர பிரதேசங்களில் வாழும் பறந்து விரிந்த நீலக் கடலை சமுத்திரத்தை நம்பி ஜீவியம் நடத்தும் மீனவர்கள் கடந்த சில தினங்களாக தமது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை விடுத்தே இத்தகைய போராட்டத்தில் குதித்துள்ளனர். நாட்டில் தொடரும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாமல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மன்ணெண்ணெய் தட்டுப்பாடே மீனவர்களை கடுமையாக பாதித்துள்ள காரணியாகும்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கடந்த மே மாதம் முதல் தொடர்ச்சியாக மீனவர்களால் சிறிய மற்றும் கணரக உபகரணங்கள் வல்லங்களை செலுத்திக் கொண்டு மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட முடியாத நிலை. இதனால் இலட்சக்கணக்கான குடும்பங்கள் வாழ்வாதாரங்களை இழந்து தவிக்கின்றனர். அன்றாட ஜீவியம் நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. குடும்பத்தில் தொழில் செயய்க் கூடியவர்கள் தொழிலை இழந்தால் உணவுப் பிரச்சினை ஏற்படுவது இயல்பாகும். பட்டினி காரணமாக வாழ முடியாத பிரச்சினை பலவிதமான பக்கவிளைவுகளை ஏற்படுத்துகின்றது. இதில் பிரதானமாக அத்தகைய குடும்பங்களில் குழந்தைகளின் கல்வி நிலை பாதிக்கப் பட்டிருக்கின்றது.

மிகவும் வறிய நிலையில் கடற்றொழிலை நம்பி வாழும் குடும்பங்களுக்கு மாற்று வழி இல்லை என்ற நிலையில் வடக்கு, கிழக்கு, தெற்கு உட்பட எல்லா பிரதேசங்களிலும் உள்ள மீனவர்கள் தொடர்ச்சியாக போராட்டத்தில் குதித்துள்ளனர். ஆனாலும் இவர்களது பிரச்சினைக்கு அரசாங்கம் எவ்வாற தீர்வு காண்பதென்பது பிரதான கேள்வியாகும்.

தற்போது குழந்தைகள் மத்தியில் போசக்கின்மை அதிகரித்து மந்த போசனம் உயர்வடைந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்திருப்பதாலும் அடிமட்ட பொருளாதார நிலையில் வாழும் மக்கள் அன்றாடம் செய்து வந்த கூலித் தொழில் பாதிக்கப்பட்டிருப்பதும் எடுக்கின்ற உழைப்பால் அன்றாட ஜீவியத்தை நடத்த முடியாமல் இருப்பதும் இவ்வாறான மந்தபோசனம் அதிகரிக்க காரணமாக அமைகின்றது. அத்துடன் போசாக்குணவு வகைகளை நுகர முடியாத அளவிற்கு விலை உயர்வாக உள்ளன. குறிப்பாக மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாதிருப்பதும் குறைவான அளவிலே மீன் உற்பத்தி (மீன் பிடி ) நடப்பதும் அதற்கான செலவினம் உயர்வாக இருப்பதாலும் மின் வகைகளின் விலைகள் கிலோ ஒன்றிற்கு 2000 ரூபா முதல் 3000 ரூபா வரையில் உயர்வடைந் திருக்கின்றது.

இந்நிலையில் மாற்றீடான மாமிச வகைகளின் விலைகளிலும் சடுதியான உயர்வு ஏற்பட்டிருக்கின்றது. கோழி இறைச்சி கிலே ஒன்று 1800 வரையிலும் மாட்டிறைச்சி 2200 ரூபா வரையிலும் கருவாடு கிலே 4000 முதல் 5000 ரூபா வரையிலும் உயர்வடைந்திருக்கின்றதால் மக்கள் போசாக்குணவை நாட முடியாத நிலை உருவாகி இருக்கின்றது.

ஆட்சி என்பது வெறுமனே ஒரு பக்கத்தை மாத்திரம் கொண்டு கவனம் செலுத்தவதாக இருந்தால் மக்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கு எல்லையே இருக்காது.

இத்தகைய நிலைமைகளுக்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்கி போராட்டம் நடத்த முற்படும் போது அவசரகால நிலைமைய பயன்படுத்தி கொடூரமான முறையில் அடக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப் படுகின்றது. இவ்வாறு அடக்கும் போது எதிர்காலத்தில் ஆட்சியாளர்கள் எத்தகைய ஊழல், மோசடிகள், முறைகேடுகள், அடாவடித்தனங்களிலும் துஷ்பிரயோகங்களிலும் ஈடுபட்டாலும் அதற்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்கி ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட்டம் நடத்தாமல் இருக்க வேண்டும் என்று தற்போதைய ஆட்சியாளர்கள் கருதுவதாக இருந்தால் அது ஜனநாயகமாக அமையாது.

அரசாங்கம் அரசியல் ஸ்தீர நிலையை ஏற்படுத்த எடுக்கின்ற அதே அளவான கவனத்தை வரிய நிலையில் வாழும் மக்களது பொருளாதார பிரச்சினைக்கு தீர்வை முன்வைப்பதற்காகவும் கவனம் செலுத்த வேண்டும். ஆர்ப்பாட்டம் என்றவுடன் அடக்குவதற்கு முன்னர் ஏன் போராட்டம் நடத்துகின்றனர், அவர்களது கொரிக்கைகள் யாவை, அவற்றிற்கான தீர்வை எவ்வாறு துரிதமாக முன்வைப்பது மற்றும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பது என்பன தொடர்பாக கவனம் செலுத்தும் செயல்திறன் கொண்டவர்களாக ஆட்சியாளர்கள் செயற்பட வேண்டும். இன்றேல் கடந்த இரண்டு வருடங்களாக நாடு எத்தகைய நிலைக்கு தள்ளப்பட்டதே அதே நிலைக்கு மீண்டும் தள்ளப்படுவதை தவிர்க்க முடியாமல் போகலாம்.

***











**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

## மனநலமும் ஆலோசனையும்

# தெளிவான இலக்கும் நிறைவான பயணமும்




நாம் வாழ்க்கையில் இலக்குகளுடன் அல்லது எதிர்பார்ப்புகளுடன் நகர்கிறோம். அப்படி நகர்ந்தாலும் சிலசமயங்களில் அடைய ஆசைப்படுவதை அடைய முடியாது போகும் சந்தர்ப்பங்களை சந்திக்கிறோம்.

இன்னும் சில சமயங்களில் நம்மால் அடைய வேண்டியவற்றில் கவனம் செலுத்த முடியாமல் தவிக்கிறோம். சில சமயங்களில் வாழ்க்கையை மீண்டும் தொடங்க வேண்டும் என்று நினைக்கிறோம். நாம் என்ன செய்கிறோம் என்பதைச் சரியாக செய்யாததனாலும் என்ன செய்ய வேண்டும் என்பதை சரியாகத் தெரியாததனாலும் நாம் இவ்வாறான நிலைகளை சந்திக்க நேரிடுகிறோம்.

எங்கள் பார்வையும் பயணமும் தெளிவான நோக்கம் கொண்டதாக இருந்தால் மட்டுமே நாங்கள் திசை திரும்பாமல் போக வேண்டிய இடத்துக்கு போய் சேரலாம். சரியானதைச் செய்வதிலிருந்தும் பொருத்தமானதை தெரிவு செய்வதில் இருந்தும் மட்டுமே சிறந்த முடிவுகளை எடுக்கத் தேவையான அறிவு எமக்குள் உருவாகிறது. சரியானதை தெரிவுசெய்து, சரியானதைச் செய்வதன் மூலம் வரும் முடிவுகள் மிகவும் தெளிவாக இருக்கும்.

நாங்கள் தொடர்ந்து சரியானதைச் செய்வதற்கு எங்களை பழக்கப்படுத்திக் கொள்ளும்போதும் சரியானதை செய்வதற்கு தேவையான ஆதாரங்களை தேடும் போதும் எங்கள் பயணத்தின் முடிவெல்லையை மிகவும் இலகுவாக அடையலாம்.

வெற்றியை நோக்கிய பயணம் என்பது நாம் வைக்கும் ஒவ்வொரு அடியிலும் அடுத்த படியை அடைவதற்காக உழைக்கும் செயல்முறையாகும், நாம் முன்வைக்கும் ஒவ்வொரு அடியும் எங்களைத் தூண்டி, தவறாமல் முன்னேறத்தை அடைய ஊக்குவித்துக் கொண்டே இருக்கும்.

வெற்றியை நோக்கி போகும் பயணம் ஒருபோதும் முடிவடையாத ஒரு அற்புதமான பயணம்.

அந்த பயணத்திற்கான உறுதியான அத்திவாரம் சரியானது எது, சரியானதை செய்வது எப்படி என்பதை தெரிவு செய்வதாகும். பயணத்தின் வெற்றி, நாம் ஏன் பயணிக்கிறோம் என்பதைப் பொறுத்தும் பயணத்தின் தன்மையை சரியாக புரிந்து கொள்வதிலும் தங்கியிருக்கிறது.

சரியான பதிலைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் சரியான கேள்வியைக் கண்டறிவோம் என்பதில் உறுதியாக இருப்போம்....!

போகவேண்டிய சரியான பாதையை கண்டு பிடித்து அந்தப் பாதையில் பயணம் செய்வோம்...!

பழைய சிந்தனை முறைக்குள் விழுந்து விடாமல் வெற்றியைப் பற்றி வித்தியாசமாக சிந்திப்போம்....!

இலக்கின்றி அலைவதற்குப் பதிலாக, நமது இலக்கையும் நோக்கத்தையும் புரிந்து பயணிப்போம்...!

"எங்கு செல்ல வேண்டும் என்று தெரியாத மாலுமிக்கு சாதகமான காற்று கிடைப்பதில்லை"

பயணம் தெளிவானால் பாதையும் தெளிவாகும்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் புதிய பீடாதிபதியாக பேராசிரியர் எம்.ஏ.எல்.ஏ. ஹலீம் தெரிவு!






**(நூருல் ஹுதா உமர், எம்.என்.எம்.அப்ராஸ்)**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் இரண்டாவது பீடாதிபதியாக பேராசிரியர் எம்.ஏ.எல்.ஏ. ஹலீம் ஏகமனதாக தெரிவானார். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் தலைமையில் பொறியியல் பீடத்தின் கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை (18) இடம்பெற்ற விஷேட ஒன்றுகூடலின்போதே பேராசிரியர் ஹலீம் பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

இவர் கல்முனையைச் சேர்ந்த பாடசாலை அதிபர் மறைந்த மொஹமட் அப்துல் லத்தீப் மற்றும் கதீஜா உம்மா ஆகியோரின் மூன்றாவது மகனாவார். பேராசிரியர் ஹலீம் கல்முனை சிங்கள மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 1 முதல் 10 வரை (1970–1980) பயின்றார்.

அம்பாறை மத்திய கல்லூரியில் (தற்போது அம்பாறை டி.எஸ். சேனாநாயக்க தேசிய பாடசாலை) தரம் 11–12 கல்வியைத் தொடர்ந்தார். கணிதத் துறையில் கல்வி கற்று பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் துறைக்கு தெரிவுசெய்யப்பட்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் சிறப்புப் பட்டத்தினை வெற்றிகரமாக நிறைவுசெய்தார்.

பின்னர் 1993 ஆகஸ்ட் மாதம் வரை பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் மின்னியல் மற்றும் இலத்திரனியல் துறையில் விரிவுரையாளராக இணைந்து பணியாற்றினார். பின்னர் கொங்கோங் சென்று அங்கு தனது முதுதத்துமாணிப் பட்டபின்படிப்பினையும் நிறைவுசெய்தார்.

1996 ஜூலையில் அமெரிக்காவின் நியூ ஜெர்சியில் உள்ள பெல் ஆய்வகத்தில் ஒரு ஆய்வாளராக இணைந்து கொண்டு மொபைல் மற்றும் நிலையான வயர்லெஸ் தகவல் தொடர்புகளில் அதிநவீன ஆராய்ச்சியினை மேற்கொண்டார். பெல் ஆய்வக ஆராய்ச்சி முடிவில், அமெரிக்காவின் நியூ ஜெர்சியில் உள்ள ஸ்டீவன்ஸ் இன்ஸ்டியூட் ஒப்ஃ டெக்னோலஜியில் கலாநிதிப்பட்டப் பின்படிப்பினைத் தொடர்ந்து அதனை வெற்றிகரமாக நிறைவுசெய்தார். பின்னர் ஸ்டீவன்ஸ் இன்ஸ்டியூட் ஒப்ஃ டெக்னோலஜி மற்றும் நியூ ஜெர்சி இன்ஸ்டியூட் ஒப்ஃ டெக்னோலஜி என்பவற்றில் ஆய்வுப் பணிகளிலும் ஈடுபட்டார்.

2009–2011 காலப்பகுதியில் சவுதி அரேபியாவில் உள்ள கிங் பஹட் பல்கலைக்கழகத்தில் துணைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

அதன் பின்னர் ஹாயில் பல்கலைக்கழகத்தில் இணைந்து இணைப் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றார். 2016–2017 காலப்பகுதியில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்து கற்பித்தல் மற்றும் பொறியியல் கற்கைகளுக்கான ஐ.ஈ.எஸ்.எல். அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சியிலும் ஈடுபட்டார். 2020 ஜனவரியில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் ஒரு முதன்மைப் பேராசிரியராகவும் இணைத்துக் கொள்ளப்பட்டார். இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் டயலொக் எக்சியாடா தனியார் நிறுவனத்துடன் இணைந்து 5வது தலைமுறை வயர்லெஸ் கண்டுபிடிப்பு மையம் (**5GIC**) ஒன்றினை நிறுவுவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினையும் அவர் வழங்கியுள்ளார் அதேநேரம் குறித்த மையத்துக்கு பணிப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

2020 பெப்ரவரியில் தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் துறையிடைசார் கற்கைகள் துறையின் தலைவராக நியமிக்கப்பட்டதுடன் 18.08.2022 ஆம் திகதி முதல் மூன்று ஆண்டுகால பதவிக்காலத்திற்கென பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 18.08.2022ஆம் திகதி இடம்பெற்ற பீடாதிபதிக்கான தெரிவில் பீட உறுப்பினர்களின் ஏகோபித்த விருப்பத்தின்பேரில் பேராசிரியர் ஹலீம் புதிய பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தனது துறையில் குறிப்பிடும்படியான ஆய்வுகளைச் செய்துள்ள பேராசிரியர் ஹலீம், அவ்வாய்வு முடிவுகளை உலகத் தரம்வாய்ந்த ஆய்வுச் சஞ்சிகைகளிலும் வெளியிட்டுள்ளார்.

பல தரம்வாய்ந்த நூல்களும் கட்டுரைகளும் அவரினால் வெளியிடப்பட்டுள்ளன. அவரது ஆய்வு வெளியீடுகள் ஆய்வாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பினைப் பெற்றுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் ஹலீமுக்கு முன்னர் பீடாதிபதியாக கடமையாற்றிய கலாநிதி எஸ்.எம்.ஜுனைடீன், தென்கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றில் முதல் தடவையாக 2013 முதல் 2022 வரை மூன்று முறை பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாக கடமையாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# திருமலை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடைக்கு டீசல் வழங்குவதற்கு முறைமைப்படுத்தப்பட்ட திட்டம் அறிமுகம்

## அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தெரிவிப்பு!



(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடைக்கு தேவையான டீசல் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு முறைமைப்படுத்தப்பட்ட திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிக்ரம தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கூட்டத்தின் போதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதனடிப்படையில் மாவட்டத்தில் மொரவெவ, கோமரங்கடவெல, பதவிசிறிபுர ஆகிய பிரிவுகளில் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டு இறுதி கட்டத்தை நெருங்கியுள்ளது. விவசாயிகளுக்கு அறுவடைக்கான டீசல் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 10 லீற்றர் என்றவாறு சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் கிரமமாக வழங்கப்பட்டு வருகின்றன. அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலின்படி பிரதேச செயலாளர்கள் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் இச்செயற்பாட்டை ஒருங்கிணைத்து செயற்படுத்தி வருகின்றனர்.

அதேபோல் விதைப்பு நடவடிக்கள் பிந்தி ஆரம்பிக்கப்பட்ட பிரதேசங்களில் நெல் அறுவடை தற்போது தொடக்கம் செப்டம்பர் மாத நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் கூடுதலாக நடைபெறும் என்பதனால் அதற்கான எரிபொருளை கிரமமான முறையில் விவசாயிகளுக்கு வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இதன்போது விவசாய சங்க பிரதிநிதிகள் அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

விவசாயிகள் பயிர்ச்செய்கை மேற்கொண்ட காலப்பகுதியை அடிப்படையாக கொண்டு அறுவடைக்கான டீசல் தேவைப்பாடு தொடர்பான பட்டியல் கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. அப்பட்டியலிற்கேற்ப விவசாயிகளுக்கு டீசல் வழங்கும் செயற்பாடு பெற்றோலியக்கூட்டுத்தாபனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்செயற்பாடு துரிதப்படுத்தப்பட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நெல் அறுவடைக்காக கொண்டுவரப்படும் டீசல் முற்றாக விவசாயகளுக்கே விநியோகிக்கப்படும். அது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி மேற்பார்வை செய்யுமாறு இதன்போது அரசாங்க அதிபர் வேண்டிக்கொண்டார்.

மேலும் பெரும்போகத்தில் உழவு நடவடிக்கைக்கான டீசலை விவசாயிகளுக்கு வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இதன்போது குறித்த பிரதிநிதிகள் அரசாங்க அதிபரிடம் வேண்டிக்கொண்டனர். உரிய விடயத்தை உரிய அமைச்சின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் விவசாயத்திற்கான உரத்தேவைப்பாடு உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர் அப்துல் ஜப்பார், மாவட்ட விவசாய பணிப்பாளர் எம். குகதாசன், தேச உர செயலகத்தின் மாவட்ட உதவி பணிப்பாளர் , விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளும், மெய்நிகரி ஊடாக பிரதேச செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

# செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி!



(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

பிரதமர் நரேந்திர மோடியை நேரில் சந்தித்து தமிழ்நாட்டின் கோரிக்கைகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் மனு அளித்தார் . நீட் தேர்வு, புதிய கல்விக் கொள்கை, காவிரி பிரச்சினை, மேகதாது உள்ளிட்ட விவகாரங்கள் குறித்த கோரிக்கை மனுவை அவரிடம் அளித்து பிரதமரிடம் முதலமைச்சர் வலியுறுத்தினார். செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழாவில் பங்கேற்றதற்காக பிரதமருக்கு அவர் நேரில் நன்றி தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க புதுதில்லி பொதிகை தமிழ்நாடு இல்லத்திலிருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்றார். இந்நிலையில் புதன்கிழமை மாலை 4 மணி அளவில் புதுதூல்லியில் உள்ள பிரதமர் இல்லத்திற்கு சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழாவுக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடிக்கு நேரில் நன்றி தெரிவித்தார்.

முன்னதாக ஜனாதிபதி, துணை ஜனாதிபதியை தொடர்ந்து பிரதமர் மோடியுடன் மு.க.ஸ்டாலின் சந்தித்தார். தமிழகத்தின் கோரிக்கைகள் அடங்கிய மனுவை பிரதமரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். நீட் விலக்கு, மேகதாது விவகாரம், புதிய கல்விக்கொள்கை போன்றவற்றில் தமிழக அரசு நலன் சார்ந்த கோரிக்கைகளை பிரதமரிடம் எடுத்துரைத்தார். நிறைவேற்றப்படாத பல தமிழக கோரிக்கைகளையும் பிரதமரிடம் நேரில் வலியுறுத்தினார்.

சுமார் 20 நிமிடங்கள் நடந்த இந்தச் சந்திப்பின்போது அதன்படி, நீட் விலக்கு, புதிய கல்வி கொள்கை காவிரி விவகாரம், மேக்கேதாட்டு அணை விவகாரம், முல்லைப் பெரியாறு, நதிநீர் இணைப்பு, கட்சத்தீவு மீட்பு, மீனவர்களுக்கான தேசிய ஆணையம், மின்சாரத் திருத்தச்சட்டத்தை திரும்பப் பெறுதல், தமிழகத்திற்கு நிலுவையிலுள்ள தொகையினை விடுவிப்பது உள்ளிட்டவை குறித்து பிரதமரிடம் கோரிக்கை வைக்கவுள்ளார். ஜிஎஸ்டி நிலுவைத் தொகை, மழைக்காலம் வரவுள்ளதால், பேரிடர் நிவாரண நிதியினை உடனடியாக விடுவிப்பது, சென்னை விமான நிலைய விரிவாக்கம், எய்ம்ஸ் மருத்துவமனை போன்ற கட்டமைப்பு வசதிகள் குறித்தும் பிரதமரிடம் முதல்வர் விவாதிக்கவுள்ளார்.இந்தச் சந்திப்பின்போது, தமிழகத்தின் பாரம்பரிய தானிய வகைகளை நினைவுப் பரிசாக பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி அவர்கள் மீண்டும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால், தற்போது அவர் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார். இந்த நிலையில், புதுதில்லி சென்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், சோனியாகாந்தி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நலம் விசாரித்துள்ளார். இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில், "அரசுமுறைப் பயணமாக புதுதில்லிக்கு வருகை தந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்திக் கொண்டுள்ள இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி அவர்களிடம் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு, அவரது உடல்நலம் குறித்துக் கேட்டறிந்தார்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாண எழுத்தாளர்களின் படைப்புக்களை வெளியீடு செய்துவைக்கும் விழா!



(பைஷல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ், சிங்கள எழுத்தாளர்களின் படைப்புக்கள் மற்றும் அவர்களின் திறமைகளை வெளியுலகிற்கு கொண்டு வருகின்ற செயற்பாடுகளை மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கடந்த பல வருடங்களாக பாரிய பங்காற்றிவருகின்றதென கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அச்சுருவாக்கப்பட்ட 4 வகை நூல்களை வெளியீட்டு வைக்கும் விழாவும், நூல்களை நூலாசிரியர்களிடம் கையளித்து வைக்கும் நிகழ்வும் (14) திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கிழக்கு மாகாணத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மூவின மக்களும் வாழுகின்ற மாகாணமாக இருக்கின்றது. அவர்களுக்குள் இருக்கின்ற படைப்புக்கள் மற்றும் கலை, கலாசார விடயங்களை வெளியுலகிற்கு கொண்டு செல்வதுடன் நின்றுவிடாமல் அவர்களையும், இளம் எழுத்தாளர்களையும் இன்னுமின்னும் ஊக்குவிக்கும் செயற்பாடுகளை மாகாண திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

மாகாணத்திலுள்ள படைப்பாளிகளினால் சமர்ப்பிக்கப்படுகின்ற படைப்புக்கள் யாவும் அதற்கான குழுவினர்களினால் பரிசீலிக்கப்பட்டு, அதில் திறமையான படைப்புக்கள் இனங்கண்டு இவ்வாறு வெளியீடு செய்து படைப்பாளிகளுக்கும் நூல்களை வழங்கி வருகின்றோம். இதன் மூலம் அவர்கள் இன்னும் பல படைப்புக்களை வெளிக்கொண்டு வருகின்ற ஊக்கத்தையும், இளம் எழுத்தாளர்களின் ஆர்வத்தையும் ஏற்படுத்துகின்றது என்றார்.

இதன்போது, அம்மாவுக்கு பிடித்த கனி என்ற சிறுவர் பாடல்கள் எழுதிய நூலாசிரியர் கலாபூசணம் பி.கனகரத்தினம், கொட்டியாரப்பற்று வன்னிபங்கள் என்ற வரலாறு எழுதிய நூலாசிரியர் வைத்திய கலாநிதி த.ஜீவராஜ், நவீன சீதை என்ற சிறுவர் கதைகள் எழுதிய நூலாசிரியர் கவிச்சுடர் (திருமதி) க.சிவரமணி, கடலோரப்பாதை என்ற சிறுவர் கதைகள் எழுதிய நூலாசிரியர் ஏ.எம். முகைதீன் ஆகியோர்களினால் எழுதப்பட்ட நூல்கள் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அச்சுருவாக்கப்பட்டு வெளியீடு செய்யப்பட்டதுடன், அவர்களுக்கு தலா 200 நூல்களையும் மாகாணப் பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு மிக அண்மையில் நியமனம் பெற்ற மாகாணப் பணிப்பாளருக்கு இவ்விழாவின்போது பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# "கத்தார் சஃபாரி மாலில்" நடைபெறும் புகைப்பட போட்டியில் இலங்கை பாஸிதின் புகைப்படமும் போட்டிக்காக தெரிவு!



இப் புகைப்பட போட்டியில் சுமார் 500க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். அதில் தெரிவு செய்யப்பட்ட முப்பது புகைப்படங்களை ஆகஸ்ட் 17 தொடக்கம் ஆகஸ்ட் 30 வரை கத்தார் அபு ஹமூரில் உள்ள சஃபாரி மாலில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சியில் மக்களினால் புகைப்படங்களுக்கு வாக்களித்து மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

முதலாவது வெற்றியாளருக்கு 3000 ரியால், இரண்டாவது வெற்றியாளருக்கு 2000 ரியால், மூன்றாவது வெற்றியாளருக்கு 1000 ரியால் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் என இரண்டு பிரிவுகளில் பரிசு வழங்கப்பட இருக்கிறது.

இதில் பல நாடுகளில் இருந்து போட்டியாளர்கள் பங்கு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரா. நல்லகண்ணு" வீர விருது பெற்றார் பல்துறைக்கலைஞர் எம்.எஸ்.எம். ஸாகிர்

(சியாத் எம். இஸ்மாயில்)

சாய்ந்தமருதைச் சேர்ந்த ஊடகவியலாளரும் பல்துறைக்கலைஞருமான எம்.எஸ்.எம்.ஸாகிர் இந்தியாவின் "இரா. நல்லகண்ணு" வீர விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் சுதந்திர தின (ஆகஸ்ட் - 15) விழாவினை முன்னிட்டு, திண்டுக்கல் பசுமை வாசல் பவுண்டேஷன், குமரி மாவட்ட தமிழ்நாடு பனைமரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம், சேலம் மாவட்ட ஆத்தூர் ஸ்ரீ சக்ஸஸ் அகடமி ரூ பவுண் டேஷன் திருச்சி ராப்பள்ளி வீரமங்கை சமூக சிந்தனை அறக் கட்டளை ஆகிய அமைப்புகள் இணைந்து நடாத்திய பல்துறை சாதனையாளர் களுக்கான "தேசத்தின் வீர விருதுகள்- 2022" வழங்கும் நிகழ்வில் இலக்கியத்துறையில் ஆற்றிவரும் சிறந்த பங்களிப்புக்காக, இலங்கையிலிருந்து கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது எனும் ஊரைச் சேர்ந்த ஊடகவியலாளரும் பல்துறைக் கலைஞருமான, முஹம்மது சஹீது முஹம்மது ஸாகிர், இந்தியாவின் "இரா. நல்லகண்ணு" வீர விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.





# நுவரெலியாவின் பேசப்படும் ஒளிப்பதிவாளரும், புகைப்படக் கலைஞருமான நடிகர் சுபாஸ் அமர்!



நேர்காணல்:
**செ.திவாகரன்**
**நானுஓயா**

சுமார் ஐந்து வருடங்களுக்கு மேலாக குறும்பட இயக்கங்களில் ஒளிப்பதிவாளராக, புகைப்படக் கலைஞராக மற்றும் நடிகராக சாதனை படைத்து வரும் பிரபலமான இளம் ஒளிப்பதிவாளர் ஒருவரை அறிமுகப்படுத்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். அந்த வகையில் இலங்கை நாட்டில் நுவரெலியா மாவட்டத்தை சேர்ந்த இளம் ஆண் ஒளிப்பதிவாளர், நடிகருமான சுபாஸ் அமருடனான நேர்காணல்:

**கேள்வி:** வணக்கம் சகோதரா!
**பதில்:** அன்பு கலந்த வணக்கம் தம்பி

**கேள்வி:** உங்களை பற்றி ஒரு சிறிய அறிமுகம் தாருங்கள் ?
**பதில்:** எனது பெயர் சுபாஸ் நான் எழில் மிகுந்த நுவரெலியாவில் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். நுவரெலியா பிரதான நகரில் யுஅழழசு என்ற பெயரில் கலையகம் (ளுவரனழை) ஒன்று நடத்தி வருகின்றேன்

**கேள்வி:** குறும்படம் இயக்கும் போது ஒளிப்பதிவாளராக இயங்க வேண்டும் என்ற ஆர்வம் எப்போது தோன்றியது?
**பதில்:** பாடசாலை செல்லும்போதே புகைப்படம் எடுக்கும் ஆர்வம் அதிகமாக இருந்தது.
அது மட்டுமல்லாமல் விழிப்புணர்வுகளுக்கான காணொளிகளை லுழுருவுருடீநு யினூடாக பார்க்கும் பழக்கத்தை பழக்கி கொண்டேன்

**கேள்வி:** இதுவரை எத்தனை குறும்படங்கள் , பாடல்கள் இயக்கியுள்ளீர்கள்?
**பதில்:** 14 பாடல்கள் வெளியீடு 4 குறும்படங்களை இயக்கி நடித்துள்ளேன் மற்றும் 7 பாடல்கள் ஒளிப்பதிவு செய்துள்ளேன் இவைகளின் மன்னிப்பாயா , உயிராய் நீ , என்ன சொல்ல , டி3 , நீயும் பெண்தானா , சண்டகாரி , மறையாதே பெண்ணே , வெயிட் பண்ணவா போன்ற சிறப்பானது

**கேள்வி:** இறுதியாக நீங்கள் இயக்கி வெளிவந்த பாடல் பற்றி சொல்லுங்கள் ?
**பதில்:** ஈறமை சாரலில் (நுநசயஅயல ளுயயசயடடை) என்பது நான் நீண்ட நாட்களாக எடுத்தே ஆகவேண்டும் என்று காத்திருந்து எடுத்த பாடல் ,இதில் எனது நண்பர்களை இணைத்து எடுத்த பாடல் என்பது முக்கிய அம்சமாகும் , அத்தோடு இறுதியில் எடுத்த முதல் காதல் பாடலாகும்.

**கேள்வி:** உங்களை ஒளிப்பதிவாளராக இயக்க தூண்டிய ஒரு காரணி ?
**பதில்:** பாடசாலை செல்லும்போது ஆர்வம் இருந்தது அன்றே! இருந்தாலும் எனக்கு ஒத்துழைப்பு வழங்க யாரும் இருக்கவில்லை அத்தோடு அதற்கான தேவையான கருவிகளும் என்னிடம் இருக்கவில்லை.
இத்துறைக்கு வருவதற்கு எனக்கு பல துன்பங்களை சந்திக்க நேறிட்டது அதை எவ்வாறு கையாள வேண்டும் அதில் இருந்து உறுவாகிய என்னம் தான் குறும்படங்களினூடாக சமூகத்திற்கு தெளிவு படுத்த வேண்டும் என்று.

**கேள்வி:** நீங்கள் கெமரா சிறப்பாக பயன்படுத்துகின்றீர்கள் இந்தக் கலையை எங்கே கற்றீர்கள்?
**பதில்:** இதற்கு முழு காரணம் டணியல் அண்ணாதான். அவர்தான் எனக்கு எவ்வாறு செயற்படுத்த வேண்டும் என்ற அனைத்து விடயங்களையும் கற்றுத் தந்திருக்கிறார். இவ்வாறான காட்சியமைப்புகளுக்கும் , புகைப்படத்திற்கும் அவர்தான் காரணம், அண்ணா!

**கேள்வி:** இத்துறையை முறைப்படி கற்றுள்ளீர்களா ? அல்லது சுயமாக கற்றவைகளா?
**பதில்:** ஆம், முறைப்படி கற்றவை இல்லை எனது முயற்சியில் சுய



முயற்சியில் கற்றவை இருந்து அதிகமாக லுழுருவுருடீநு மற்றும் இணையதளத்தில் தேடி கற்றவைதான்
எனது ஊரில் நடக்கும் அனைத்து கலைநிகழ்வுகளும் என்னூடாகத்தான் நடைபெறும். அங்குதான் நான் இயக்கிய பல கலைநிகழ்வுகளை அரங்கேற்றி ஒரு இயக்குநரானேன். அதன் பிறகு நான் பார்த்த திரைப்படங்களை வைத்துத்தான் இயக்குகிறேன். இன்றும் ஒவ்வொரு படத்திலும் நான் பல அனுபவங்களை பெற்றிருக்கிறேன் ஆனால் இத்துறையில் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டும் அம்சங்கள் ஏராளம் .....

**கேள்வி:** உங்களது ஏனைய துறைசார்ந்த விடயங்கள் உள்ளனவா ?
**பதில்:** ஆம் திருமண நிகழ்வு திட்டமிடல் **(wedding Evant planning)** விளையாட்டு துறையில் ஆர்வம் அதிகம், ஏதோ கொஞ்சம் நன்றாக வரைவேன்

**கேள்வி:** உங்களது இந்தத் துறையின் சாதனையில் உங்கள் பெற்றோரின் பங்களிப்பு?
**பதில்:** இதில் அதிக பங்கு என் அப்பாவுக்கே உண்டு எனது விருப்பத்திற்கு எதிராக எதையும் கூற மாட்டார் , பாடசாலை காலத்தில் இருந்து இன்று வரை எனது விருப்பப்படி வாழ்ந்து வருகிறேன் , அப்பா , அம்மாவின் ஆசி பெற்று செல்லும் அனைத்து விடயங்களுமே எனக்கு வெற்றிதான். 'உனக்கு எது பிடிக்கிறதோ அதை செய்'என்று கூறுவார்கள் இன்றுவரை என்னுடைய சந்தோஷத்துக்காக வாழ்ந்துகொண்டிருக்கிறார். அவர்தான் என் வாழ்வின் முதல் வெற்றி.
ஆனால் முடியாது, இது வீன்வேலை என்று சொன்ன அவர்களின் வார்த்தையே இத்துறையில் இவ்வளவு தூரம் பயனிக்கச்செய்கின்றது.

**கேள்வி:** உங்களுக்கு சினிமாவில் ஒளிப்பதிவாளராக ஆகும் சந்தர்பம் வந்தால் என்ன செய்வீர்கள்..?
**பதில்:** என்ன இப்படி ஒரு கேள்வி? வாய்ப்புகள் கிடைத்தால் நிச்சயம் சாதிப்பேன் மலையகத்தின் ஒருவர் சார்பில்

**கேள்வி:** இத்துறையில் சாதிக்கவிரும்பும் இளம் வயதினருக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்?
**பதில்:** உங்களுக்கு அதிகம் ஆர்வம் உள்ளததை விருப்பத்துடன் செய்யுங்கள் எமது சமூகத்தை பொருத்த வரையில் இத்துறையை குறைத்தே இடைபோடுகிறார்கள்.( போட்டோ புடிக்கிறவர், வீடியோ எடுக்கிரவர் ) அவ்வலவுதான் சாதிக்க வேண்டும் என்ற என்னம் மிக குறைவாக உள்ளது
இத்துறையில் சாதிக்க இருக்கின்றவர்கள் தொடர்ந்தும் முயற்ச்சி செய்யுங்கள்.. என்றோ ஒரு நாள் இத்துறையில் உயர்ந்து இருப்பீர்கள்.

**கேள்வி:** உங்களுக்கு சினிமாவில் ஒளிப்பதிவாளராக ஆகும் சந்தர்பம் வந்தால் என்ன செய்வீர்கள்?
**பதில்:** என்ன இப்படி ஒரு கேள்வி? வாய்ப்புகள் கிடைத்தால் நிச்சயம் சாதிப்பேன் மலையகத்தின் சார்பில்

**கேள்வி:** உங்கள் அடுத்த படைப்பு எப்போது வெளிவரும்?
**பதில்:** அடுத்த படைப்பு ஒரு திரைப்படம் என்று வெளியீடு செய்வதற்கு தயாராகி உள்ளோம் , இப்போது 100மூ இற்கு 60மூ வீதமான ஏற்பாடுகள் நிறைவுக்கு வந்துள்ளது , வெளியீடு தொடர்பான தகவல் சீக்கிரம் அறிவிப்போம் , இத்திரைப்படத்திற்கு நடிப்பு திறன் உள்ள ஆண் , பெண்களுக்கு வாய்ப்பும் வழங்க உள்ளோம் தகுதி உள்ளவர்கள் என்னை தொடர்பு கொள்ளவும் முகபுத்தகத்தில் (ளுரடியளா யுஅழழச )

**கேள்வி:** உங்களது படைப்புகளுக்கான முதலீடு எப்படி கிடைக்கின்றன?
**பதில்:** இதுவரை கிடைத்தது இல்லை , யாரும் எனக்கு உதவியதும் இல்லை என்னுடன் நடிப்பவர்களுக்கு கூட என்னுடைய செலவில்தான் அனைத்தும் செய்வேன் நான் எடுத்த படைப்புக்களில் யாருடைய தலையீடுமின்றி எடுத்தவையே.
மலையகத்தில் நான் இக்குறும்படங்கள் , பாடல்கள் எடுக்க எத்தனையோ பேரிடமும், எத்தனையோ அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் சென்று உதவி கேட்டிருக்கிறேன். அவர்கள் 'உங்களுக்கு என்ன அடையாளம் இருக்கிறது, எதற்காக நாங்கள் கொடுக்கவேண்டும்' என்றெல்லாம் சொல்வதை கேட்டிருக்கிறேன். நிறைய அவமானங்களை பெற்றிருக்கிறேன்.
ஆனால் இப்போது நான் உணர்கிறேன் அடையாளம் உள்ளதை...
நான் சமூக மாற்றத்துக்காகவும் எனது ஆசைக்காகவும் தான் குறும்படங்கள் , பாடல்களை இயக்குகிறேன்.

**கேள்வி:** உங்களது இந்த வெற்றிக்கு காரணம் யார்? உங்களது நன்றிக்குரியவர்கள் யார் யார்?
**பதில்:** ஆம், எனது அன்பான மனைவி சாலினி அனைத்து வெற்றியிலும் என் வலது கையாக நின்று என்னை முன்னோக்கி வழி நடத்தியவர், தொடர்ந்தும் எனது படப்புக்களுக்கு ஊக்கம் தந்து பாராட்டக்கூடிய அப்பா, அம்மா, அண்ணா, தங்கை மற்றும் நெருக்கமான நண்பர்கள் தான்.

**கேள்வி:** இளம் வயதில் சிலஅடைவுகளை தொட்டுவிட்டீர்கள். இதற்கு திறமை தவிர வேறு எது காரணங்கள் இருக்கின்றனவா?
**பதில்:** ஆமாம் எப்போதும் நம்புகின்ற இறைவனின் அன்பு, நண்பர்களின் ஊக்கம் மற்றும் எனது முயற்சி.




# ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இரத்ததான முகாம்




**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இரத்ததான முகாமொன்று நடைபெறவுள்ளதாக இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.ஐ.எம்.பஸீல் தெரிவித்தார்.

நாட்டின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக வேண்டி ஓட்டமாவடி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள இவ் இரத்ததான முகாம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ளது.

ஆண், பெண் என இரு பாலாருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரத்ததான முகாமில் அனைவரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்குமாறு இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.ஐ.எம்.பஸ ீல் வேண்டிக் கொண்டுள்ளார்.